REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
E Paper
மின்னிதழ்
2024 மார்ச் 16 சனிக்கிழமை
தினகரன்
THINAKARAN
තිනකරන්
வரு. 92 இல. 66 | Saturday 16, March, 2024 | 10 பக்கங்கள் | 50/-

## தேசிய அரச வெசாக் வைபவம்; இம்முறை மாத்தளையில் ஏற்பாடு



தேசிய அரச வெசாக் வைபவம் இம்முறை மாத்தளை தர்மராஜ பிரிவெனா வளவில் நடைபெறவுள்ளது. இதற்கு இணைந்ததான வைபவம் மாத்தளை அனுருத்த அரண என்ற இடத்தில் நடைபெறவுள்ளதாக புத்தசாசன மத மற்றும் 06

# இலங்கை-இந்திய வர்த்தக உறவுகள்

# இரு நாடுகளுக்கும் பயனளிக்கும் வகையில் விரைவில் பலப்படுத்தப்பட வேண்டும்

### இலங்கை, இந்திய சங்கம் ஏற்பாடு செய்த நிகழ்வில் ஜனாதிபதி தெரிவிப்பு

### இந்தியாவும் இலங்கையும் இணைந்து வெளியிட்ட 'தொலைநோக்கு' அறிக்கையை தொடர்ச்சியாக முன்னெடுக்க உறுதி பூண்டுள்ளோமென்றும் ஜனாதிபதி தெரிவிப்பு



இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான விரிவான வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகளை இரு நாடுகளுக்கும் நன்மையளிக்கும் வகையில் மிக விரைவில் பலப்படுத்தப்பட வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

இலங்கையின் 76ஆவது சுதந்திர தினம் மற்றும் 75ஆவது இந்திய குடியரசு தினத்தை முன்னிட்டு இலங்கை, இந்திய சங்கம் (*Sri Lanka India Society*) நேற்று முன்தினம் (14) கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த விசேட நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டதுடன், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா விசேட விருந்தினராக கலந்துகொண்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இதன்போது விசேட நினைவுப் 06

## வடக்கின் அபிவிருத்தி, கடற்றொழில் துறைக்கு

# இந்தியா, சீனா, ஜப்பான் நாடுகள் ரூ. 4,915 மில்லியன் நிதி உதவி



### வடக்கின் அபிவிருத்திக்கு ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளதாகவும் அமைச்சர் டக்ளஸ் தெரிவித்தார்

வடமாகாணத்தின் பல்வேறு அபிவிருத்திகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக இந்தியா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகள் 4,915 மில்லியன் ரூபா நிதி உதவிகளை வழங்க முன்வந்துள்ளதாக, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்துவது அவசியமெனவும், அமைச்சர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவித்த போது, "பாரிய பொருளாதார நெருக்கடியை எமது நாடு சந்தித்திருந்தாலும், தற்போதைய அரசாங்கத்தின் சரியான அரசியல் வழிநடத்தல் காரணமாக அந்நிலையிலிருந்து தற்போது மீண்டு வருவதாகவும், வடக்கின் அபிவிருத்திகளுக்கும் தற்போதைய அரசாங்கம் அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளது" எனத் தெரிவித்தார்.

வெளிநாடுகளுடன் நாம் ஏற்படுத்திக்கொண்ட இராஜதந்திர நடவடிக்கையின் பயனாக வடக்கின் அபிவிருத்திக்கு சீனா 1,500 மில்லியன் ரூபா நிதி உதவியை வழங்க முன்வந்துள்ளது. 06

# இலங்கையின் எல்லையில் எந்தவொரு நாட்டுக்கும் தளம் அமைக்க இடமில்லை



### அமெ. உளவுத்துறை கூற்றை இலங்கை நிராகரிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இலங்கையின் எல்லையில் சீன இராணுவத் தளத்தை அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக அமெரிக்க உளவுத்துறை வெளியிட்டுள்ள கூற்றை அரசாங்கம் மறுத்துள்ளது.

அரசாங்கத்தின் சார்பில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் அது 06

## எக்காரணத்துக்காகவும் இனி

# வயல் காணிகளை நிரப்புவதற்கு அனுமதி வழங்கப் போவதில்லை



### அரசாங்கம் கொள்கை ரீதியான தீர்மானம்; - அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

வயல் காணிகளை வேறு எந்த உபயோகத்திற்காகவும் நிரப்புவதற்கு முழுமையாக தடை விதிக்கப்பட்டுள்ளது என்றும் அதற்கு இனி அரசாங்கம் ஒரு போதும் அனுமதி வழங்கப் போவதில்லை என்றும் 06

## இலங்கை பாதுகாப்பு அமைச்சுக்கு

# விசேட வெடிபொருள் அகற்றும் உபகரணங்கள் சீனா அன்பளிப்பு



சீன இராணுவ மானியத் திட்டத்தின் கீழ் விசேட வெடிபொருட்களை அகற்றும் உபகரணத் தொகுதிகள் பாதுகாப்பு அமைச்சுக்கு அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டன. இலங்கைக்கான சீன மக்கள் குடியரசுத் தூதுவர் கியூ சென்கொங் மற்றும் இராணுவத் தலைமையகத்தின் 06

# பிணையில் விடுதலை செய்ய கோரி கெஹெலிய மீண்டும் மனு தாக்கல்

### திங்கட்கிழமை ஆராய்வு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இம்யுனோக்ளோபியுலின் ஊசி மருந்து கொள்வனவு தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல மேலும் மனுவொன்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். தமக்கு பிணை வழங்கக் கோரி அவர் மேற்படி மனுவை நேற்று கொழும்பு மேல் 06

# சிறு குற்றமிழைத்தோருக்கு வீட்டுக்காவல் திட்டம்



### விரைவில் நடைமுறைக்கு வரும்

சிறு குற்றங்களை இழைத்தோரை வீட்டுக்காவலில் வைப்பதன் மூலம் தண்டனைக் காலத்தை நிறைவு செய்யும் நடவடிக்கை இந்த ஆண்டின் இறுதிக்குள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக நீதி மற்றும் சிறைச்சாலைகள் விவகார இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன கூறியுள்ளார். 06

## இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறிய

# பாரிய இழுவைப் படகொன்றுடன் 15 தமிழக மீனவர் வடக்கில் கைது

**யாழ். விசேட நிருபர்**



யாழ்ப்பாணம், காரை நகர் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தமிழக கடற்றொழிலாளர்கள் 15 பேர் நேற்று (15) அதிகாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், இவர்களிடமிருந்து பாரிய இழுவைப் படகொன்றும் 06

## சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை

# பிரதி சபாநாயகர் அல்லது எம்.பி. ஒருவரின் முன்னிலையிலேயே நடைபெற வேண்டும்



### எதிர்க்கட்சி கோரிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக எதிர்க்கட்சிகளினால் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தை பிரதி சபாநாயகர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் முன்னிலையிலேயே நடத்தப்பட வேண்டும் 06



03 சென்னை-பலாலிக்கிடையே Indigo Air சேவை நடத்த தயார்

## பண்டிகைக் காலத்தில்


# பெரிய வெங்காயத்துக்கு கட்டுப்பாட்டு விலை



பண்டிகைக் காலத்தில் பெரிய வெங்காய விலையை குறைக்கும் வகையில் கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக, வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

பண்டிகைக் காலத்தில் பொதுமக்களுக்கு அத்தியாவசிய பொருட்களை இலகுவில் கிடைக்கச் 06

# பால்மா வகைகளின் விலை 150 ரூபாவினால் குறைப்பு



ரமழான் மாதம் மற்றும் சித்திரை புத்தாண்டை முன்னிட்டு பால் மாக்களின் விலை நேற்று (15) முதல் குறைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய ஒரு கிலோ பால் மாவின் விலை 150 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாக, வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

பால் மா விலையை குறைப்பது தொடர்பாக பால் மா இறக்குமதியாளர்களுடன் தாம் கலந்துரையாடியதாகவும், அமைச்சர் மேலும் கூறினார்.

## பேரப்பிள்ளையின் பிறந்ததினத்துக்காக

# சிறிய ரக முச்சக்கர வண்டியை தயாரித்து நல்லூரில் சாதனை



சிறிய ரக முச்சக்கரவண்டியொன்றை யாழ். நல்லூரைச் சேர்ந்த பொன்னையா உதயகுமார் தயாரித்துள்ளார். தனது பேரப்பிள்ளையின் 06

# இந்திய பாராளுமன்ற தேர்தல் திகதி இன்று அறிவிப்பு



இந்திய பாராளுமன்றத்தின் தேர்தல் திகதி இன்று அறிவிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு அமைவாக ஆந்திரப் பிரதேசம், அருணாச்சலப் பிரதேசம், ஒடிசா, சிக்கிம் உள்ளிட்ட 04 மாநில சட்டப் பேரவைத் தேர்தல் அட்டவணை ஆகியனவற்றை (இன்று 16) பிற்பகல் வெளியிடயிருப்பதாக இந்திய தலைமைத் தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.


இந்திய பாராளுமன்ற பதவிக்காலம் எதிர்வரும் மே மாதத்துடன் முடிவடைய உள்ளது. இதைத் 06

## காட்டு யானை தாக்குதலில் விவசாயி உயிரிழப்பு

(அநுராதபுரம் தினகரன் நிருபர்)

காட்டுயானை தாக்குதலில் விவசாயியொருவர் சம்பவ இடத்திலேயே பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளதாக மதவாச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

மதவாச்சி பொலிஸ் பிரிவின் லிந்தவெவ பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். லிந்தவெவ, மதவாச்சி பகுதியை வசிப்பிடமாக கொண்ட 61 வயதுடைய விவசாயி ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது. சம்பவ தினமான நேற்று மாலை தனக்கு சொந்தமான சேனையில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோதே யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. சடலம் தற்சமயம் மதவாச்சி பிரதேச வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.



## நகர்வலம்

# புத்தளம் மாவட்ட வறிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த நடவடிக்கை

(புத்தளம் தினகரன் நிருபர்)

புத்தளம் மாவட்டத்திலுள்ள வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதை நோக்கமாக கொண்டு புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் புதிய வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்து வைத்தார்.

புத்தளம் நகர மத்தியில் தனக்கு சொந்தமான அசோகா திரையரங்கு அமையப்பெற்ற இடத்தை கடந்த 20 வருடகால போராட்டத்தில் மீட்டெடுத்து அவ்விடத்தில் ஆறுமாடி வர்த்தக கட்டடத்தொகுதிக்கான அடிக்கல்லை அவர் நாட்டி வைத்தார்.

இதன் நிர்மாணப் பணிகள் நிறைவு பெற்றதும் அது ஒரு பள்ளிவாசலுக்கு வக்பு செய்யப்பட்டு அதன் முழு வருமானமும் புத்தளம் மாவட்டத்தின் பொதுத் தேவைக்கு பயன்படுத்தப்படுமெனவும் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் இதன் போது தெரிவித்தார்.





நீலையூர் சுதா எழுதிய "கொத்து வேலி" எனும் கவிதை நூலின் சிறப்பு பிரதியை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமருக்கு அவரது இல்லத்தில் வைத்து நேற்றுமுன்தினம் வழங்கி வைப்பதை படத்தில் காணலாம்.





தர்கா நகர் பிரதான வீதியில் அமைந்துள்ள கரீனா புட்சால் மைதானத்தில் 06 மாணவர்கள் Karate Black Belt பட்டம் பெற்று கௌரவிக்கப்பட்டனர்.





சென்னையிலுள்ள பங்களாதேசின் துணை உயர் ஆணையர் ஷெல்லி சலேஹின் அண்ணா பல்கலைக்கழகத்தின் விவேகானந்தா கேட்போர்கூடத்தில் நடைபெற்ற சர்வதேச தாய்மொழி தின கலாசார நிகழ்வில் துணை உயர் ஆணையர் டொக்டர். டி. வெங்கடேஷ்வரனுடன் பங்கேற்றார்.

## மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயம்

(உடப்பு குறூப் நிருபர்)

உடப்பு முதலாம் வட்டாரப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளை செலுத்திய சாரதியே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார். இவரது தலைப்பகுதி சேதமடைந்த நிலையில் சிலாபம் வைத்தியசாலைக்கு ஆம்புலன்ஸ் வண்டி மூலம் கொண்டு செல்லப்பட்டார்.

ஆறுமுகசாமி தனுஷ்காந்த் வயது 24 என்ற இளைஞனே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார். ஆண்டிமுனை சின்னக்கொலனி பகுதியிலிருந்து உணவுப்பொதியை உடப்பு பகுதியிலுள்ள தமது சொந்தக்காரரின் வீட்டுக்கு வழங்கிவிட்டு வந்தபோது, வேகக்கட்டுப்பாட்டை இழந்த வண்டி உடப்பு பிரதான வீதியிலுள்ள மின்கம்பத்தின் மீது விபத்துக்குள்ளான போதே அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.



இவர் அணிந்த தலைக்கவசம் நொறுங்கிய நிலையில் காணப்படுவதோடு மேலதிக விசாரணைகளை உடப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வெல்லம்பிட்டி சக்ஸஸ் கல்லூரியில் ரமழான் வசந்த விழா

ஐ. ஏ. காதிர் கான்

'புனித ரமழானை மாண்புடன் வரவேற்போம்' எனும் தொனிப் பொருளிலானரமழான்வசந்தவிழா, வெல்லம்பிட்டி *(Success College)* சக்ஸஸ் கல்லூரியில், முதன் முறையாக அண்மையில் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் பாத்திமா சப்ரா தாஹிர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கல்லூரி பிரதம நிர்வாக அதிகாரிகளில் ஒருவரான எம்.எம். ஜெளபர், பணிப்பாளர் ஹஸ்னி நிஸாம்தீன் உள்ளிட்ட பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் பெருந்திரளான மக்கள் பங்கேற்றனர்.

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் தேசியத் தலைவர் இஹ்ஸான் ஏ. ஹமீத் பிரதம அதிதியாகவும், பேரவையின் கொழும்பு கம்பஹா மாவட்டங்களுக்கான பணிப்பாளர் நஸாரி காமில் கௌரவ அதிதியாகவும் கலந்துகொண்டு, ரமழான் வசந்த விழா கண்காட்சிக் கூடத்தைத் திறந்து வைத்ததுடன், ரமழான் வசந்த விழா நிகழ்வுகளையும் பார்வையிட்டனர்.



இச்சிறப்பு விழா நிகழ்வில் கல்லூரி மாணவ மாணவிகளின் புனித ரமழான் பற்றிய உரைகள், கஸீதாக்கள், ஹிப்ழ் மனனம் மற்றும் ரமழான் விழிப்புணர்வு நாடகங்கள் என்பனவும் நடைபெற்றன.

அத்துடன், ரமழான் சம்பந்தமான வினாக்களும் கேட்கப்பட்டு, இதில், அதிகமான வினாக்களுக்கு விடைகளை அளித்த, இக்கல்லூரியின் தரம் 11 இல் கல்வி கற்கும் பாத்திமா சாலிஹாவுக்கு அதற்கான பரிசும் வழங்கப்பட்டது.

ரமழான் உணவு வகைகளைத் தயாரித்து பரிமாறல் மற்றும் சமூகமளிக்கும் அனைத்து தாய்மார் மற்றும் மாணவிகளுக்கும் இலவசமாக "ஹெனா" மருதாணியும் கைகளில் வைத்து அலங்கரிப்புச் செய்யப்பட்டன.

கடந்த 2023 ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரியில், ஆரம்பப் பிரிவு முதல் (க.பொ.த. சா/த) தரம் 11 வரையிலான சுமார் 50 இற்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள், ஆங்கில மொழி மூலம் மிகவும் ஆர்வத்துடன் கல்வி கற்று வருவதாக, கல்லூரி அதிபர் பாத்திமா சப்ரா தாஹிர் தெரிவித்தார்.

ரமழானின் வருகைக்காக வேண்டியே, நாம் இக்கண்காட்சியையும் விழாவையும் மாணவ மாணவிகளின் பங்களிப்புக்களுடன் முதன் முறையாக ஒழுங்கு செய்தோம். எனக்குப் பக்க பலமாக நின்று, கல்லூரி மாணவ மாணவிகள் மிகவும் உற்சாகத்துடன் முழு அளவிலான ஒத்துழைப்புக்களையும் தந்தார்கள். இதற்காக, நான் அவர்களுக்கு எனது நன்றிகளையும் பாராட்டுதல்களையும் மனப்பூர்வமாகத் தெரிவித்துக் கொள்கின்றேன். இக்கண்காட்சியும், இங்கு இடம்பெற்ற விழா நிகழ்வுகளும், எனக்கு பெரும் மகிழ்ச்சியைத் தருகின்றது. எதிர்காலத்திலும் இது போன்ற பயனுள்ள சிறந்த விழா நிகழ்வுகளை, மாணவர்களின் ஆதரவோடு நடாத்த உறுதி பூண்டுள்ளேன் என கல்லூரி அதிபர் பாத்திமா சப்ரா தாஹிர் தெரிவித்தார்.

இவ்விழா நிகழ்வில் கலந்துகொண்ட அனைத்து மாணவ மாணவிகளுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# காடுகளின் அளவை இவ்வருட இறுதிக்குள் 32 வீதமாக அதிகரிக்க திட்டம்

### அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)



நாட்டில், காடுகளின் அளவு 32 வீதமாக அதிகரிக்கின்ற பொறுப்பு தமக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அப்பணியை நிறைவேற்றும் பணிகளில் என்னுடன் துறைசார் அதிகாரிகள் ஈடுபட்டு வருவதாக வனப்பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி நேற்று தெரிவித்தார்.

இதுதொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எனக்கு இப்பாரிய பொறுப்பை வழங்கியுள்ளார். எனவே இப்பணியை இவ்வருட இறுதிக்குள் நடத்தி முடிக்கலாம் என்ற நம்பிக்கையில் பணியாற்றுகிறோம்.

எதிர்கால சந்ததிக்காக இந்த நாட்டின் வன வளங்களை பாதுகாப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். வனப்பரிமாணத்தை அதிகரிப்பதோடு அதற்கு இணையாக நாட்டின் காடழிப்பைக் கட்டுப்படுத்துவதும் பிரதான பொறுப்பாகும். சட்டத்துக்கு முரணான விதத்தில் காடழிக்கும் முயற்சிகள் இடம்பெறுவதை தவிர்த்தால் மட்டுமே எமது இலக்குகளை அடைய முடியும். எனவே இவ்விரண்டு பணிகளிலும் எமது அவதானத்தை செலுத்தி ஜனாதிபதியின் பணிப்புரையை நிறைவேற்ற முயற்சித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

## பலாங்கொடை எரிபொருள் நிலைய டீசலில் நீர் கலப்பு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

### ஐ.ஓ.சீ பரிசோதனை

பலாங்கொடை நகரில் பல நோக்கு கூட்டுறவு சங்க நிர்வாகத்தில் இயங்கும் ஐ.ஓ.சி.நிறுவனத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் விற்கப்படும் டீசலில் தண்ணீர் கலந்திருப்பது தெரியவந்துள்ளது. சில வாகனங்களின் உரிமையாளர்கள் இவ்விடயத்தை எரிபொருள் நிலைய முகாமையாளருக்கு செய்த முறைப்பாட்டையடுத்து இக்கலப்பட முயற்சி தெரியவந்துள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டீசல் பெற்றுக் கொண்ட சில வாகனங்களின் இயக்கம் நின்றதால் இந்த வாகனச் சாரதிகள் இவ்விடயத்தை எரிபொருள் நிலையத்தின் முகாமையாளருக்கு அறிவித்ததையடுத்து அவர் இவ்விடயத்தை ஐ.ஓ.சி நிறுவன நிர்வாகத்துக்கு அறிவித்துள்ளார். இதனையடுத்து ஸ்தலத்துக்கு வந்த ஐ.ஓ.சி அதிகாரிகள் நிரப்பு நிலைய டீசலை பரீட்சித்துப் பார்த்த போது அதில் தண்ணீர் கலந்திருப்பது தெரியவந்துள்ளது. இதனையடுத்து இவ்விடயம் குறித்து அறிய விசாரணைகள் நடைபெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.



## மலைச்சாரல்

# மத்திய மாகாண உதவி ஆசிரியர்களுக்கு விரைவில் நியமனம் வழங்க ஏற்பாடு

நுவரெலியா தினகரன் நிருபர்



மத்திய மாகாண உதவி ஆசிரியர்களின் நியமனங்களை எதிர்வரும் 19 ஆம் திகதி வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக மத்திய மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தன்னிடம் உறுதிப்படுத்தியதாக நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில்,

நுவரெலியா மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டம் நேற்றுமுன்தினம் நுவரெலியா மாவட்ட செயலாளர் காரியாலயத்தில் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திசாநாயக்க தலைமையில் நடைபெற்றது. இதன் போது மத்திய மாகாண உதவி ஆசிரியர்களின் பிரச்சினை தொடர்பாக சபையின் கவனத்திற்கு கொண்டு சென்றதோடு அவர்கள் உடனடியாக நியமனம் வழங்க வேண்டும் என கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

இதன்போது மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த மத்திய மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் நியமனங்களை எதிர்வரும் 19 ஆம் திகதி வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அதனை நிச்சயமாக குறித்த திகதியில் வழங்க முடியும் என்பதையும் தெரிவித்தார்.

இந்த ஆசிரியர்கள் 2016 ஆம் ஆண்டு உதவி ஆசிரியர்களாக நியமனம் பெற்று 2019 ஆம் ஆண்டு அவர்கள் தங்களுடைய தகுதியை ஆசிரியர்களாக பூர்த்தி செய்திருந்த போதிலும் அவர்களுக்கான நியமனம் பல காரணங்களால் கடந்த 5 வருடங்களாக வழங்கப்படாமல் இருந்தது.

இன்றைய பொருளாதார நிலைமையில் ஆசிரிய உதவியாளர்கள் மிகுந்த சிரமத்திற்கு மத்தியிலேயே தங்களுடைய தொழிலையும் வாழ்வாதாரத்தையும் முன்னெடுத்து வருகின்றனர். எனவே அவர்களுடைய நியமனத்தை உடனடியாக வழங்கி அவர்கள் தங்களுடைய தொழிலை சிறப்பாக முன்னெடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற விடயத்தை தெரிவித்த பொழுதே மாகாண கல்வி அமைச்சர் எதிர்வரும் 19 ஆம் திகதி நியமனம் வழங்கப்படவுள்ளதாக தெரிவித்ததாக பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார். இவ்விடயத்தை உறுதி செய்து கொள்ளும் முகமாக இதுதொடர்பாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே உறுதிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 மார்ச் 16 சனிக்கிழமை
தினகரன்
THINAKARAN
தினකරන්

தொழுகை நேரம்
சுபஹ் - 05.03
லுஹர் - 12.21
அஸர் - 03.35
மஃரிப் - 06.22
இஷா - 07.31

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் பங்குனி 03
ராகுகாலம் : காலை : 10.50 - 12.20வரை
சுபநேரம் : காலை : 06.20 - 07.50வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி






# ரய்யான் வாயில் வழியாக....

இஸ்லாம் மனிதனைப் புடம்போட்டு நெறிப்படுத்திடவென தெளிவாக வழி காட்டிக் கொண்டிருக்கின்றது. அந்த வகையில் அல்லாஹ் பல கடமைகளை இறைவிசுவாசிகளுக்கு விதியாக்கியுள்ளான்.

அவற்றில் ரமழான் நோன்பு தொடர்பில் அவன் விஷேட கவனம் செலுத்தியுள்ளான். அதனால் தான், 'நோன்பாளிக்கு நானே கூலி வழங்குகின்றேன்' எனக் குறிப்பிட்டிருக்கின்றான். இதன் மூலம் நோன்பாளிகளை அவன் கண்ணியப்படுத்துவது தெளிவாகத் தெரிகின்றது.

அருள்மறையாம் அல் குர்ஆன் அருளப்பட்ட ரமழான் மாதத்தில் பசியையும் தாகத்தையும் ஆசைகளையும் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கும் நபி (ஸல்) அவர்களின் போதனைகளுக்கும் அமைய கையாள்வதன் பிரதிபலனாக நோன்பாளிகள் இவ்வாறு கௌரவிக்கப்படுகிறார்கள். அவர்களை 'ரய்யான்' என்ற வாயில் ஊடாக சுவர்க்கத்தில் பிரவேசிக்க அல்லாஹ் வாய்ப்பளிக்கிறான்.

நோன்பாளிகளைத் தவிர வேறு எவரும் அந்த வாயில் ஊடாக சுவர்க்கத்தில் பிரவேசிக்க முடியாது. இது மாபெரும் கண்ணியமும் அருளும் ஆகும்.

எனவே ரமழான் நோன்பை இஸ்லாமிய வழிகாட்டல்களுக்கு அமைய நோற்று சுவர்க்கத்தில் ரய்யான் வாயில் வழியாகப் பிரவேசிக்கும் பாக்கியத்தை பெற்றிட திடசங்கற்பம் பூணுவோம்.

முப்தி எ.எச்.எம் மின்ஹாஜ்
(காஷிபி, மழாஹிரி) நிந்தவூர்

## தவக்கால சிந்தனை



# அன்பு வார்த்தைகள் வெற்றி பெறும்

அன்பு வார்த்தைகள் எப்போதும் வெற்றியடையும். 'ஏன் அவனை பிடித்துக் கொண்டு வரவில்லை' என்று அருவருப்பூட்டும் வார்த்தைகளால் படைவீரர்களிடம் கேட்கப்பட்ட போது, அவர்கள் அளித்த பதிலானது 'அவரைப் போல எவரும் என்றுமே பேசியதில்லை' என்றார்கள்.

இதற்கு முன்னதாக மக்கள் கூட்டத்தினர் 'உண்மையாகவே இவர் இறைவாக்கினர். இவரே கிறிஸ்து எனும் மீட்பர்' என்றனர். இதற்கெல்லாம் பொருத்தமுடையதாக இயேசு கூறிய வார்த்தைகள் யாவை? இயேசு,'யாரேனும் தாகமாயிருந்தால் என்னிடம் வந்து பருகட்டும். என்னில் நம்பிக்கை கொள்பவரிடமிருந்து உயிருள்ள தண்ணீர் அருவியாக பாய்ந்தோடும்' என்றார்.

'ஒருவரது வாக்குமூலத்தைக் கேளாது, அவர் என்ன செய்தாரென்று அறியாது ஒருவருக்குத் தீர்ப்பளிப்பது நமது சட்டப்படி முறையாகுமா?' என்கிற வினாவை நிக்கதேமு மிகவும் கனிவாகவும் பணிவாகவும் கேட்டார். ஆயினும் இயேசுவின் எதிரிகளாகிய அவர்கள், நிக்கதேமுவையும் சேர்த்து 'நீங்களும் ஏமாந்து போனீர்களோ? தலைவர்களிலாவது பரிசேயர்களிலாவது அவனை நம்புவோர் யாராவது உண்டா' என்று வெறுப்பூட்டும் பதிலை வழங்கினர்.

இயேசு நிக்கதேமுடன் பேசிய அன்பு வார்த்தைகளை நினைவிற் கொள்ளுங்கள். 'தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலை வாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்' (யோவான் 3:16). தவக்காலமென்பது இயேசுவின் அன்பு வார்த்தைகள் நம்மை வெறுப்பூட்டும் வார்த்தைகளிலிருந்து விடுவிக்கும் காலமாகும்.

நிக்கதேம் எப்போதிருந்து இயேசுவைப் பின்பற்றத் தொடங்கினார் என்று நமக்குத் தெரியாது. ஆயினும் அவரும், அரிமத்தியா யோசேப்பும் இயேசுவின் உடலை சிலுவையிலிருந்து இறக்கி கல்லறையில் அடக்கம் செய்தார்கள் என்பது நமக்குத் தெரியும். இயேசுவின் அன்பு வார்த்தைகள் அவர்களது இதயங்களைக் கொள்ளையடித்தன. இயேசு நமக்காக இறந்து, உயிர்த்தெழுந்தார். அருவருப்பூட்டும், வெறுக்கத்தக்க வார்த்தைகளைக் கொண்ட இன்றைய உலகினை வெற்றிகொள்ள அன்பு வார்த்தைகளை நாமும் பயன்படுத்துவோம்.

அருட்தந்தை நவாஜி...
(திருகோணமலை மறைமாவட்டம்)

# சென்னை — பலாலிக்கிடையே Indigo Air சேவை நடத்த தயார்



இந்தியாவின் சென்னைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் புதிய விமான சேவையை முன்னெடுக்க இலங்கை அரசாங்கத்திடம் Indigo Airlines எனும் இந்திய விமான நிறுவனம் அனுமதி கோரியுள்ளது.

தற்போது இந்தியாவில் உள்நாட்டு விமானங்களை மட்டுமே இயக்கி வரும் Indigo Airlines, இலங்கை அரசாங்கம் அனுமதி அளித்தவுடன் சென்னைக்கும் யாழ்ப்பாணத்தின் பலாலிக்கும் இடையே பல ஆய்வு மற்றும் பைலட் விமானங்களை நடத்தவும் நம்புகிறது.

இந்த விடயம் தொடர்பாக கலந்துரையாட Indigo Airlines விமான நிறுவனத்தின் அதிகாரிகள் குழுவினர், இலங்கை வந்து அதற்கான அனுமதியை கோரியுள்ளதாகவும் தெரியவருகின்றது. இதேவேளை தற்போது யாழ்ப்பாணம் மற்றும் சென்னைக்கு இடையேயான விமான சேவைகளை Alliance Air வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மூளாய் முத்துக்குமாரசுவாமி கோயில் இரதோற்சவம் 23 இல்

யாழ்ப்பாணம், மூளாய் ஸ்ரீமுத்துக் குமாரசுவாமி தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவத் திருவிழாவின் தேர்த் திருவிழா எதிர்வரும் 23ஆம் திகதி காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது. கொடியேற்றத் திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து திருமஞ்சத் திருவிழா எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ளது.

தேர்த் திருவிழாவைத் தொடர்ந்து தீர்த்தத் திருவிழா எதிர்வரும் 24ஆம் திகதியும் பூங்காவனத் திருவிழா 25ஆம் திகதியும் வைரவர் மடை 26ஆம் திகதியும் நடைபெறவுள்ளதாக, கோயிர் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

வடமத்திய மாகாண பதில் ஆளுநராக

# வடமேல் மாகாண ஆளுநர் லசஷ்மன் யாப்பா நியமனம்



வடமேல் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, வடமத்திய மாகாண பதில் ஆளுநராக கடந்த புதன்கிழமை (13) முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் வெளிநாட்டுக்குச் சென்றுள்ளதால், அவர் நாடு திரும்பும்வரை பதில் ஆளுநராக லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

அரசியலமைப்பின் 154ஆவது பிரிவுக்கமைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது

# வடமாகாண சபையின் புதிய பிரதம செயலாளர் கடமை பொறுப்பேற்பு

யாழ். விசேட நிருபர்



வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளராக எல்.இளங்கோவன் நேற்று தமது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றார்.

யாழ்ப்பாணம், கைதடியிலுள்ள வடக்கு மாகாண சபை அலுவலகத்தில் அவர் தனது கடமை பொறுப்பேற்கும் நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், மாகாண அமைச்சுகளின் உத்தியோகத்தர்கள், திணைக்களத் தலைவர்கள், பிரதம செயலாளர் செயலக உத்தியோகத்தர்கள், மத குருமார்கள், நலன் விரும்பிகள் என பலர் கலந்து கொண்டனர்.

'Celebration of women' தியானத்தின் அமைதி

# ஓவியக் கண்காட்சிகளை ஜனாதிபதி பார்வையிட்டார்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க (14) கொழும்பு 07, லயனல் வென்ட் கலையரங்கில் இரண்டு சிரேஷ்ட ஓவியர்களான இரோமி விஜேவர்தன மற்றும் வின்ஸ்டன் சுலுதாகொட ஆகியோரின் ஏற்பாட்டில் நடைபெற்ற ஓவியக் கண்காட்சிகளை பார்வையிட்டார்.

இரோமி விஜேவர்தனவின் கலை வாழ்க்கையின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு'Celebration of Women' எனும் தொனிப்பொருளில் ஓவியக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஓவியக் கண்காட்சிகளை நடாத்தும் வின்ஸ்டன் சுலுதாகொட தனது 34 ஆவது ஓவியக் கண்காட்சியை 'பாவனவக சாந்திய'(தியானத்தின் அமைதி) என்ற தலைப்பில் ஏற்பாடு செய்திருந்தார்.

46 வருடங்களாக ஓவியத் துறையில் ஈடுபட்டு வரும் வின்ஸ்டன், வெளிநாடுகளிலும் தனது ஓவியங்களை காட்சிப்படுத்தியுள்ளார்.

அன்றாட வாழ்க்கை உறவுகள், உலகளாவிய நெருக்கடிகள், மத வாழ்க்கை முறைகள் உள்ளிட்ட பல வண்ணமயமான ஓவியங்கள் இந்த ஓவியக் கண்காட்சிகளில் இடம்பெற்றிருந்தன. ஓவியக் கண்காட்சிகளைப் பார்வையிட வந்த மக்களுடன் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்ட ஜனாதிபதி, சில குழு புகைப்படங்களிலும் இணைந்து கொண்டார்.

இதன்போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நினைவுப் பரிசும் வழங்கி வைக்கப்பட்டன.

பேராசிரியர் மைத்திரி விக்ரமசிங்க மற்றும் முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி, கலாநிதி தயான் ஜயதிலக்க, சுஜன் விஜேவர்தன, லுசில் விஜேவர்தன, நடாலி விஜேவர்தன, மாலன் ஜயவர்தன, ரோஷினி குணரத்ன,சிரானி தேனபது, நிஹால் தேனபது மற்றும் மூத்த கலைஞர் எஸ். எச். சரத் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

யாழ். வட்டுக்கோட்டை படுகொலை

# 05 சந்தேக நபர்களுக்கும் விளக்கமறியல் உத்தரவு

யாழ். விசேட நிருபர்



யாழ். வட்டுக்கோட்டை பிரதேசத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவரை கடத்தி படுகொலை செய்த சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட 05 சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்க மல்லாகம் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த திங்களன்று தனது மனைவியுடன் காரைநகருக்கு மோட்டார் சைக்கிளில் சென்று விட்டு வீடு திரும்பிய போது, பொன்னாலை பாலத்தடியில் இவர்களை வன்முறைக் கும்பலொன்று கடத்திச் சென்றது.

கணவனை ஒரு வாகனத்திலும் மனைவியை மற்றுமொரு வாகனத்திலும் கடத்திய இக்கும்பல், மனைவியை சித்தங்கேணியில் இறக்கி விட்டு சென்றதுடன், கணவனை சித்திரவதைக்கு உள்ளாக்கி படுகாயங்களுடன் வட்டுக்கோட்டை வைத்தியசாலைக்கு முன்பாக கைவிட்டுச் சென்றனர்.

படுகாயங்களுடன் இக்குடும்பஸ்தரை வட்டுக்கோட்டை வைத்தியசாலை பணியாளர்கள் மீட்டு, யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் உயிரிழந்தார்.


இச்சம்பவம் தொடர்பாக விசாரணையை முன்னெடுத்த பொலிஸார், வட்டுக்கோட்டையில் ஒரு சந்தேக நபரைக் செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது, இவரை எதிர்வரும் 20ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை கிளிநொச்சியில் பதுங்கியிருந்த அராலியைச் சேர்ந்த 4 சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் நேற்று முன்னிலைப்படுத்திய போது, இவர்களை எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# நாட்டில் கடும் வெப்பநிலை; நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வீழ்ச்சி

## தடையின்றி 24 மணிநேரமும் மின்சார விநியோகம்

லோரன்ஸ் செல்வநாயகம்



நாட்டில் நிலவும் கடும் வெப்பநிலை காரணமாக நீர் மின் உற்பத்திக்காக உபயோகப்படுத்தப்படும் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 70 சதவீதமாக குறைவடைந்துள்ளதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் தற்போதைய நிலையில் மின் துண்டிப்பின்றி 24 மணித்தியாலங்களும் மின்சாரத்தை வழங்க முடியும் என்றும் மின்சார சபை தெரிவித்துள்ளது.

கடும் வெப்பநிலை காரணமாக காசல்ரீ மற்றும் மாவுசாகலை நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் விரைவாக குறைந்து வருவதாகவும் அந்த நீர்த்தேக்கத்துடன் சம்பந்தப்பட்ட பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக் காலை காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் சாதாரண மட்டத்திலிருந்து 25 அடி குறைந்து காணப்பட்டதாகவும் அதேவேளை மாவுசாகலை நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் சாதாரண மட்டத்திலிருந்து 23 அடிவரை குறைந்து காணப்பட்டதாகவும் அந்த பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த இரண்டு நீர்த்தேக்கங்களிலும் நீர்மட்டம் குறைந்து காணப்பட்டாலும் தற்போது நீர் மின் மின்சார உற்பத்தியில் எந்த வித பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மஹா சிவராத்திரி தினத்தில்

# எலுமிச்சை பழமொன்றின் விலை 35,000 ரூபா



மஹா சிவராத்திரி தினத்தில் எலுமிச்சை பழமொன்று 35,000 ரூபாக்கு ஏலத்தில் விற்பனையான சம்பவம் அனைவரையும் ஆச்சரியப்பட வைத்துள்ளது.

தமிழ்நாட்டின் ஈரோடு மாவட்டத்திலமைந்துள்ள கோயிலொன்றிலேயே இவ்வாறு விற்பனையாகியுள்ளது.

சிவபுரி கிராமத்துக்கு அருகில் பழம் பூசைய்யன் கோயிலில் இந்த எலுமிச்சை பழம் உட்பட மேலும் சில பொருட்கள் சிவனுக்கு படைக்கப்பட்டதை தொடர்ந்து, அவை ஏலத்தில் விடப்பட்டன.

இந்த ஏலத்தில் சுமார் 15 பக்தர்கள் கலந்துகொண்டதுடன், கடைசியில் ஈரோட்டைச் சேர்ந்த பக்தர் ஒருவர் இந்த எலுமிச்சை பழத்தை ஏலத்தில் கொள்வனவு செய்துள்ளார்.

ஏலத்தில் வெற்றி பெறுபவர் செல்வச் செழிப்புடன் வாழ்வாரென்பது அக்கிராம மக்களின் நம்பிக்கையாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

'யுக்திய' சுற்றிவளைப்பு

# 24 மணிநேரத்தில் 940 நபர்கள் கைது

நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணிநேரத்தில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட 'யுக்திய' விசேட சுற்றிவளைப்பில் 996 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.



போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடைய 940 சந்தேக நபர்கள் மற்றும் குற்றப் பிரிவுக்கு குறிப்பிடப்பட்ட பட்டியலிலிருந்த 56 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது 301 கிராம் 434 மில்லிகிராம் ஹெராயின், 500 கிராம் ஐஸ், 13 கிலோ 963 கிராம் கஞ்சா, 2,806 கஞ்சா செடிகள், மாவா 2 கிலோ 347 கிராம், 3,216 மாத்திரைகள், 139 கிராம் மதன மோதகம் உள்ளிட்டவற்றை கைப்பற்றியதாகவும், பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# கொழும்பில் இலவச கல்விக் கருத்தரங்கு

எதிர்வரும் மே மாதம் நடைபெறவிருக்கும் க.பொ.த. சாதாரணதர பரீட்சைக்கு தோற்றும் தமிழ்மொழி மூலமான மாணவர்களின் தேர்ச்சி அடைவு மட்டத்தை அதிகரிக்கும் நோக்கில் இலவச கல்விக் கருத்தரங்கு, கொழும்பு13 விவேகானந்தா மேடு விவேகானந்தா சபை மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (17) காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை நடைபெறவுள்ளது.

சட்டத்தரணி தேவசேனாதிபதி தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் பிரதம அதிதியாக தேசிய லொத்தர் சபையின் முன்னாள் பிரதி பொது முகாமையாளர் சுந்தரேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

கணிதம், விஞ்ஞானம், வரலாறு, ஆங்கிலம், தமிழ், வணிகக் கல்வி ஆகிய பாடங்களுக்கான விரிவுரைகளை தேர்ச்சி பெற்ற வளவாளர்கள் வழங்கவுள்ளதுடன், கருத்தரங்கில் கலந்துகொள்ளும் மாணவர்களுக்கான பாடக் குறிப்புகளும் கடந்த கால வினா விடைப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுமென, ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.

மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெற முடியுமென்றும் இதில் கலந்துகொள்ள விரும்பும் பாடசாலை மாணவர்கள் 0771133400 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ள முடியுமெனவும், ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் பங்குனி மாதம் 03ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரமழான் பிறை 05

### குறள் தரும் சிந்தனை



ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்த தில்

தாகம் கொண்டு தவிக்கும் பசுவுக்காகத் தண்ணீர் வேண்டுமென இரந்து கேட்டாலும்கூட, அப்படிக் கேட்கும் நாவுக்கு, அதைவிட இழிவானது வேறொன்றுமில்லை.

# நாட்டின் எதிர்காலம் மீதான அக்கறையே முதலில் அவசியம்!

முதலில் நாட்டின் எதிர்காலம் பற்றியும், நாட்டின் இருப்பு குறித்தும் கரிசனை செலுத்துவதே இன்று அவசியமாகின்றது. இல்லையேல் மீட்டெடுக்க முடியாத பாதாளத்தினுள் இலங்கை வீழ்ந்து விடுவது தவிர்க்க முடியாததாகி விடும். இந்த யதார்த்தத்தை நாட்டு மக்கள் புரிந்து கொண்டுள்ளவாறு, அரசியல்வாதிகளில் பலர் இன்னுமே புரிந்து கொள்ளாதிருப்பதுதான் கவலைக்குரியது.

நாட்டின் பொருளாதார நெருக்கடியை மேலும் மோசமாக்கும் விதத்திலேயே எதிரணி அரசியல்வாதிகள் பலரின் சிந்தனைகள் அமைந்துள்ளன. நாட்டைமென்மேலும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்க வைப்பதிலேயே எதிரணி அரசியல்வாதிகள் பலர் கண்ணுங்கருத்துமாக உள்ளனர். நாட்டின் நலன் மீது அவர்களுக்கு உண்மையான அக்கறை இல்லையென்பது புரிகின்றது.

நாட்டில் உருவெடுத்த பொருளாதார நெருக்கடிக்கு இன்றைய அரசு எவ்விதத்திலும் காரணமல்ல என்பதை மக்கள் புரிந்து கொண்டுள்ளனர். ஆனால் எதிரணி அரசியல்வாதிகளோ அந்த உண்மையை மக்களிடம் வெளிப்படுத்துவதற்குத் தயாராக இல்லை. பொருளாதார நெருக்கடிக்கு இன்றைய அரசுதான் காரணமென்ற அர்த்தத்திலேயே அவர்கள் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

முன்னைய அரசு கடைப்பிடித்த தவறான அணுகுமுறைகளே நாட்டில் பொருளாதார நெருக்கடிக்கு வழிவகுத்தன. எமது நாடு இனிமேல் ஒருபோதுமே மீளமுடியாத நெருக்கடிக்குள் வீழ்வதற்கிருந்த வேளையிலேயே நாட்டின் தலைமைப்பதவியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதையடுத்தே பொருளாதாரம் சீரடையத் தொடங்கியது. வரிசை யுகம் மறைந்தது, நாடு ஸ்திர நிலைமைக்குத் திரும்பியது. நாட்டில் பொருளாதார நெருக்கடி இப்போது முழுமையாகச் சீரடையாத போதிலும் அரசாங்க ஊழியர்கள், ஓய்வூதியக்காரர், வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கின்ற மக்கள் போன்றோரையெல்லாம் அரசாங்கம் கைவிட்டு விடவில்லை. தனியார்துறை, கல்வி, வர்த்தகம் போன்ற துறைகளுக்கும் ஜனாதிபதி கூடுதல் முக்கியத்துவம் அளித்து வருகின்றார்.

அன்றைய பொருளாதார நெருக்கடி வேளையில் நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கு எதிரணியினர் முன்வரவில்லை. நாட்டில் நிலவிய ஸ்திரமற்ற நிலைமையைக் கண்டும், பொருளாதார சவால்களை நினைத்தும் எதிரணியினர் அச்சம் கொண்டனர். எதிரணியினர் பின்வாங்கிய வேளையிலேயே சவால்களை முறியடிக்கும் துணிச்சலுடன் நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

நாட்டை இன்று அவர் நெருக்கடியிலிருந்து மீட்டெடுத்துள்ளார் என்பதை சர்வதேசமே ஏற்றுக் கொண்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் உதவி பெறுவது உட்பட விவேகம் நிறைந்த அவரது திட்டங்களால் நாட்டின் பொருளாதாரம் தற்போது பெருமளவு வளர்ச்சியடைந்து வருகின்றது.

ஆட்சியதிகாரத்தில் ஐக்கிய தேசியக் கட்சி அமர்ந்திருக்கின்ற காலத்தில் நாட்டில் பஞ்சம் நிலவுவதில்லையென்ற ஐதீகம் இன்றும் கூட மக்கள் மத்தியில் நிலவுகின்றது. பெரும்பாலும் கிராமப்பகுதிகளிலுள்ள சாதாரண மக்கள் தங்களுக்குள் இவ்வாறு பேசிக் கொள்வதுண்டு.

ஐ.தே.க ஆட்சி நிலவுகின்ற காலத்தில் ஒவ்வொரு குடும்பத்திலும் மக்களின் கைகளில் பணம் இருக்குமென்றும், உணவுக்குப் பஞ்சம் நிலவுவதில்லையென்றும் அக்காலம் தொடக்கம் மக்கள் பேசிக் கொள்வது வழக்கம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்திலும் நாட்டில் பொருளாதார நெருக்கடி முற்றாக நீங்கி விடுமென்பதுதான் மக்களின் நம்பிக்கையாக இருக்கின்றது.

மக்களின் அவ்வாறான நம்பிக்கையில் உண்மை இல்லாமலில்லை. ஐக்கிய தேசியக் கட்சியானது அமரர் டி. எஸ்.சேனநாயக்க காலம் தொட்டு சாதாரண மக்களின் வாழ்க்கைத் தரம் குறித்து விசேட அக்கறை செலுத்தி வருகின்றது எனலாம். முக்கியமாக, கிராமத்து மக்களின் வாழ்க்கைத்தரத்தில் ஐ.தே.கவுக்கு விசேடமான அக்கறை உண்டென்பதை மறுப்பதற்கில்லை.

கிராமத்து மக்களின் விவசாயம் உள்ளிட்ட தொழில் துறைகளுக்கு அரசாங்கம் முழுமையான ஆதரவு நல்க வேண்டும். அரசாங்க ஊழியர்களுக்கு முடிந்தளவு சம்பள அதிகரிப்பு வழங்கப்பட வேண்டும். அரசாங்கதுறையைப் போன்று தனியார்துறையும் ஊக்குவிக்கப்பட வேண்டியது மாத்திரமன்றி, தனியார்துறை ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு வழங்கப்படுவது அவசியம்.

இவையெல்லாம் ஐ.தே.கவின் பாரம்பரியக் கொள்கைகள் ஆகும். அவ்வாறான பாரம்பரியக் கொள்கைகள் இன்றைய அரசிலும் தென்படுவதை நாம் காண்கின்றோம்.

நாட்டில் பொருளாதாரம் வளர்ச்சி பெற்றாலேயே மக்களின் வாழ்க்கைத் தரமும் உயருமென்பதை மறந்து விடலாகாது. பொருளாதார மீட்சிக்கான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டிய எதிரணியினதும் கடமையென்பதை மறந்து விடலாகாது.

editor.tkn@lakehouse.lk

# அவுஸ்திரேலியா-இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் முதல் காலாண்டு நிதியுதவி பெற்ற கிழக்கு மாணவர்கள்

அவுஸ்திரேலியாவிலிருந்து கடந்த 36 வருடங்களாக இயங்கிவரும் தன்னார்வத் தொண்டு நிறுவனமான இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் நிதி அனுசரணையில், மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் வதியும் ஆதரவற்ற மாணவர்களுக்கான நிதி உதவி வழங்கல் நிகழ்வு அண்மையில் பாண்டிருப்பில் நடைபெற்றது.

கல்வி நிதியத்தின் கிழக்கு மாகாண தொடர்பாளர் அமைப்பான ஆதரவற்ற மாணவர் கல்வி அபிவிருத்தி நிறுவகத்தின் தலைவர் முன்னாள் அதிபர் ந. கமலநாதன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இலங்கையில் வாழ்க்கைச் செலவு அதிகரித்திருப்பதை கவனத்தில் கொண்டிருப்பதனால், இவ்வாண்டு (2024) முதல் மாணவர்களுக்கான நிதிக்கொடுப்பனவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

தந்தையரை இழந்து வறுமைக்கோட்டின் கீழ் வதியும் தமிழ் மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு, மாதாந்தம் நான்காயிரம் ரூபா வீதம், முதல் காலாண்டுக்கான நிதிக்கொடுப்பனவு தற்போது வழங்கப்பட்டது.

இந்நிதி உதவியானது கடந்த காலங்களில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம், உள்நாட்டுப் போர், மற்றும் காரணங்களால் தந்தையை இழந்து ஆதரவற்ற நிலையில் தமது பாடசாலைக் கல்வியை தொடர சிரமப்படுகின்ற மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கும் நோக்கில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு தமது பாடசாலைக் கல்வியை பூரணப்படுத்தும் வரை (தரம் 1 முதல் க.பொ.த உயர்தரம் வரை) தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றது.

அம்பாறை மாவட்டத்தில் பதிமூன்றாவது வருடமாக தொடரும் இந்நிகழ்வில் இவ்வாண்டின் முதற் காலாண்டுக்கான நிதி உதவியை பதினேழு பாடசாலை மாணவர்களுடன் ஒரு தொழில் நுட்பக் கல்லூரி மாணவியும் பெற்றுக் கொண்டார்.


இந்நிகழ்வில் ஆதரவற்ற மாணவர் கல்வி அபிவிருத்தி நிறுவகத்தின் பொருளாளர் த.ரவிச்சந்திரன் (ஆசிரிய ஆலோசகர்), செயற்குழு உறுப்பினர்களான மு. சுபைந்திரராஜா (ஓய்வுநிலை அதிபர்),

சி. புனிதன் (ஓய்வுநிலை அதிபர்), திருமதி புஸ்பாவதி நவரெட்ணம் (ஓய்வுநிலை ஆசிரியர்), வி. நகுலேஸ்வரன் (ஆசிரியர்), திருமதி தியாகராணி சிவகுமார், செல்வி ஞா.தர்மிகா ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான நிதி உதவியினை வழங்கினர்.

அவுஸ்திரேலியாவில் வதியும் தமிழ் அன்பர்களின் ஆதரவுடன் இயங்கும் இலங்கை மாணவர் கல்வி நிதியம் வடக்கு, கிழக்கு,மேற்கு மற்றும் மலையக மாணவர்கள் பலருக்கும் கடந்த 36 வருடங்களாக உதவி வருகின்றது என்பது குறிப்பிடத்தகுந்தது.

கடந்த காலங்களில் இந்நிதியத்தின் உதவி பெற்ற ஆயிரக்கணக்கான மாணவர்கள், பல்கலைக்கழக கல்வி உட்பட உயர் கல்வியை தொடர்ந்து தொழில் வாய்ப்புகளையும் பெற்றுள்ளனர்.








# சம்மாந்துறையில் சிங்கள கற்கைநெறி நிறைவு விழா

அரச கரும மொழிகள் திணைக்களத்தால் நடத்தப்படுகின்ற 150 மணித்தியாலங்களைக் கொண்ட சிங்கள கற்கை பாடநெறி நிறைவு விழா சம்மாந்துறையில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வு சம்மாந்துறை வலய சிங்கள பாட வளவாளர் ஏ.எச்.நாஸிக் அஹ்மத் தலைமையில் சம்மாந்துறை அல்அர்சத் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக் கல்விப்பணிப்பாளர் டொக்டர் உமர் மௌலானா, கௌரவ அதிதிகளாக பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான பி எம்.வை.அறபாத், ஏ.எல்.அப்துல் மஜீத், கோட்டக் கல்விப்பணிப்பாளர் ஏ.நஸீர், உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா, அதிபர் எம்ஏ.றஹீம் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

சிங்கள கற்கை நெறியின் விரிவுரையாளர் சனத் ஜெயசிங்க கலந்து கொண்டு இரு மொழிகளிலும் உரையாற்றியதோடு அவர் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

சம்மாந்துறை வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள் என்று 106 பேர் இந்த 150 மணிநேர பயிற்சி நெறியில் கலந்து கொண்டு நிறைவு செய்துள்ளனர்.

பயிலுனர்களின் ஆடல், பாடல், நாடகம் என்பனவும் மேடையேறின. விழா முழுக்க முழுக்க சிங்கள மொழியில் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

காரைதீவு குறூப் நிருபர்...







# மாணவர்களின் திறன்வகுப்பறை செயற்பாட்டுக்கு பாராட்டு

கடந்த 1 ஆம் திகதி புத்தளம் மணல்தீவு அரசினர் றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயத்தில் IMHO மற்றும் Ratnam Foundation இனால் வழங்கப்பட்ட smart board கற்றல் உபகரணத்தொகுதி உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டு ஆசிரியர்கள் மாணவர்களின் பயன்பாடு அவதானிக்கப்பட்டது.

இப்பாடசாலையில் 120 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். மாணவர்களின் செயற்பாட்டை பார்த்தபோது ஆச்சரியமாக இருந்தது. அவர்கள் மிகுந்த விருப்புடன் கற்றலில் ஈடுபட்டனர். மதிப்பீட்டின் போது எல்லோருமே அடிப்படைக் கற்றல் தேர்ச்சியினை குறித்த அலகில் பெற்றிருந்தனர்.

இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு இத்திறன் வகுப்பறை மிகுந்த ஒரு கொடையாகும் என அதிபரும் பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளரும் குறிப்பிட்டனர். இந்நிகழ்வில் பங்குபற்றிய IMHO வதிவிடப்பிரதிநிதி தனது உரையில், ஆரம்பப் பிரிவு மாணவர்களின் அடிப்படை தேர்ச்சிகளுக்கு உதாரணமாக எழுத்துபொறிமுறை திறன்களுக்கு எவ்வித பங்கமும் வராமல் திறன்வகுப்பறை செயற்பாட்டை ஆசிரியர்கள் நன்கு திட்டமிடவேண்டும் என குறிப்பிட்டார்.

நிகழ்வுகள் மிகச்சிறப்பாக அமைந்திருந்தன. மாணவர்களின் ஈடுபாடு விதந்துரைக்கத்தக்கது.





# தமிழ்நாட்டில் படிப்படியாக உயரும் பா.ஜ.க செல்வாக்கு!

இந்தியாவில் நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டில் பா.ஜ.க கூட்டணி 13 சதவீத வாக்குகளைப் பெறும் என்று நேற்றுமுன்தினம் வெளியான நியூஸ் 18 கருத்துக் கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கணிப்பு மட்டுமன்றி இன்னும் சில கணிப்புகளில் பா.ஜ.கவிற்கு கணிசமான வாக்கு வங்கி கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

லோக்சபா தேர்தல் நெருங்கி வரும் நிலையில் பல்வேறு கருத்துக் கணிப்புகள் வெளியாகி வருகின்றன. தமிழ்நாட்டில் கட்சியின் நிலை குறித்தும் கணிப்புகள் வெளியாகி வருகின்றன. முன்னைய தேர்தல்களிலும் இவ்வாறு வெளியிடப்பட்டிருந்த கருத்துக் கணிப்புகள் ஓரளவு சரியாகவே இருந்துள்ளன. எனவே இப்போதைய கருத்துக் கணிப்புகளும் ஓரளவு உண்மையாகவே இருக்குமென்று நம்பப்படுகின்றது.

தமிழ்நாட்டில் தி.மு.கதான் பெரும்பான்மை இடங்களை வென்றெடுக்கும் என்று கணிப்புகள் உறுதி செய்கின்றன. ஆனால் மொத்தத்தில் பார்த்தால், பா.ஜ.க தமிழ்நாட்டில் கணிசமான வாக்குகளை பெறும் அல்லது இடங்களைக் கைப்பற்றும் என்றே நம்பப்படுகிறது.

தந்தி டிவி, நியூஸ் 18 கணிப்பில் பா.ஜ.க கூட்டணிக்கு 13 சதவீதம் கொடுக்கப்பட்டுள்ளது. மற்றைய சில கணிப்புகளில் பா.ஜ.க கூட்டணிக்கு 20க்கும் அதிகமான வாக்கு சதவீதம் கொடுக்கப்பட்டுள்ளது.

# யுத்தத்தை எதிர்த்து தீவிரமாக போராடும் இஸ்ரேலிய தாய்மார்!




போரை எதிர்த்துப் போராடும் தாய்மார்கள், தங்களது இந்த புதிய அமைப்பை 'The Mothers Cry' என்று அழைக்கிறார்கள். அவர்களில் பலர் தங்கள் மகன்மாரை களத்திலிருந்து வீட்டிற்கு அழைத்து வர முயற்சிக்கிறார்கள்.

காசா போருக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் இஸ்ரேலியர்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணமே உள்ளது. பெருகி வரும் இந்த இஸ்ரேலியர்களின் போர் எதிர்ப்பில், தாய்மார்கள் தங்கள் மகன்மார் அங்கு போரில் பணியாற்றுவதை தடுக்க பல போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

தற்போது காசா போருக்கு எதிரான தாய்மார்களின் முன்முயற்சி பொதுவெளிப்பாட்டைப் பெற்றுள்ளது. அவர்கள் 2000 ஆம் ஆண்டில் இஸ்ரேலிய துருப்புக்கள் லெபனானில் இருந்து திரும்பப் பெறுவதற்கு வழிவகுத்த போராட்டத்தை ஒத்த வகையில் குரல் கொடுத்து வருகின்றனர்.

**கட்டாய ராணுவ பணிக்கு மறுப்பு:**

இஸ்ரேலிய இராணுவத்தில் கட்டாய பணிக்குச் சேர மறுத்த பல இளம் இஸ்ரேலிய இளைஞர்கள் இராணுவ விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் உடனடியாக 30 நாள் சிறைத்தண்டனை அனுபவிக்க பலரும் இராணுவ சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இஸ்ரேல் குடிமக்கள் எல்லோரும் 18 வயது நிரம்பியதும் கட்டாய இராணுவ சேவை செய்ய வேண்டும். ஆண்கள் 32 மாதங்களும், பெண்கள் 24 மாதங்களும் இராணுவப் பணியில் இணைந்திருக்க வேண்டும். தற்போது இந்த கட்டாய சேவைக்கு எதிராக பலர் குரல் கொடுத்துள்ளனர்.

'வன்முறை வன்முறையைத் தீர்க்காது. அதனால்தான் நான் மறுக்கிறேன்' என அண்மையில் கட்டாய சேவைக்கு மறுத்த டெல் அவிவ் இளைஞன் 'டீன் தால் மிட்னிக்' என்பவரின் வழக்கு உலகின் கவனத்தை பெற்றுள்ளது.

'படுகொலைக்கு தீர்வு காண முடியாது என்று நான் உறுதியான நம்புகிறேன்' என்று அவர் கூறினார். காசா மீதான கொடூர தாக்குதல், ஹமாஸ் நடத்திய கொடூரமான படுகொலையைத் தீர்க்காது.

ஆனால், மத்திய இஸ்ரேலில் காசா வேலிக்கு அருகிலுள்ள டெல் ஹாஷோமரில் வாழும் இந்த இஸ்ரேலிய இளம் இளைஞன் மிட்னிக் தனது முடிவை உறுதியாக ஆதரித்தார்.

போர்க்கால அடிப்படையில் ஒரு நாட்டின் தனித்துவத்தை பேண இராணுவப் பணி அவசியமாகும். இதனால் இப்போது கட்டாய சேவையை மறுத்தால் சிறைத்தண்டனை என்பது வேதனையான முடிவாகும்.

அத்துடன் பாலஸ்தீனப் பிரதேசங்களில் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பில் கட்டாய சேவைக்கு எதிரான பிரசாரத்தில் 'refuseniks' ஐ இணைக்கும் ஆதரவு வலையமைப்பான Mesarvot இன் X தளத்தில் இஸ்ரேலிய இளைஞன் 'டீன் தால் மிட்னிக்' என்பவரின் வழக்கு உலகின் பார்வைக்கு வெளிவந்துள்ளது.







இஸ்ரேலில் உள்ள ஊழல் அரசியல்வாதிகளிடமிருந்தோ அல்லது ஹமாஸிடமிருந்தோ தீர்வு கிடைக்காது.

இது இரு தேசங்களின் மகன்கள் மற்றும் மகள்களான எங்களிடமிருந்து தீர்வு வரும் என்று மிட்னிக் உலகளாவிய நிலைப்பாட்டை வெளிப்படுத்தி உள்ளனர்.

'இரத்தத்தால் சொர்க்கத்தை உருவாக்க முடியாது. கண்ணுக்கு ஒரு கண் என பறித்து நாம் அனைவரும் குருடராக இருக்கிறோம். இராணுவத் தீர்வு மூலம் அமைதி இல்லை' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியபடி பல இளைஞர்கள் போர் எதிர்ப்புக்கு ஆதரவாக தற்போது போராடுகின்றனர்.

இஸ்ரேலிய இராணுவம் மனசாட்சியை எதிர்க்கும் நிலையைக் கொண்டுள்ளது. கட்டாய இராணுவ விதிவிலக்குகள் பொதுவாக மதஅடிப்படையில் மட்டுமே வழங்கப்படுகின்றன. தீவிர ஆர்த்தடாக்ஸ், ஹரேடி யூதர்கள் சட்டப்பூர்வமாக விலக்கு அளிக்கப் படுகிறார்கள். ஆயினும் அரசியல் கொள்கையின் விஷயமாக பணியாற்ற மறுப்பது சரியான ஆட்சேபனையாக கருதப்படாது.

## இராணுவ கட்டாய பணிக்கு இளைஞர்கள் முன்வராததால் இஸ்ரேலுக்கு புதிய தலைவலி!

இஸ்ரேல் கட்டாய ராணுவ சேவை:

உலகின் வலிமையான இராணுவங்கள் பட்டியலில் 18ஆவது இடத்தில் இருக்கிறது இஸ்ரேல். இராணுவத்தில் சேவை செய்வது ஆண்களுக்கும் பெண்களுக்கும் கட்டாயமாகும். இஸ்ரேலிய பாதுகாப்புப் படையில் ஆண்கள் மூன்று ஆண்டுகளும் பெண்கள் சுமார் இரண்டு ஆண்டுகளும் பணியாற்றுவது கட்டாயம்.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள இஸ்ரேலிய குடிமக்களுக்கு இது பொருந்தும். புதிதாகக் குடியேறியவர்களுக்கும், சில மதங்களைச் சேர்ந்தவர்களுக்கும் மருத்துவ அடிப்படையில் இந்த விதியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

கூடுதலாக, சில சிறப்பு விதிகளின் அடிப்படையில், விளையாட்டு வீரர்கள் குறுகிய காலத்திற்கு சேவை செய்யலாம்.

இஸ்ரேல் இராணுவத்தில் இப்போது 1,69,500 பேர் முழுநேரப் பணியில் இருக்கிறார்கள். இவர்களைத் தாண்டி 4,65,000 பேர் ரிசர்வ் பணியில் இருக்கிறார்கள். எந்த நேரத்திலும் இவர்களைக் களத்துக்கு அழைக்க முடியும்.

மத்திய கிழக்கில் துருக்கி, எகிப்து, ஈரான் போன்ற நாடுகளின் இராணுவங்களில் இஸ்ரேலைவிட வீரர்கள் எண்ணிக்கை அதிகம். ஆனாலும், நவீன ஆயுதங்கள் மற்றும் போர்முறையால் இஸ்ரேல் தனித்து நிற்கிறது.

எதிரிகளால் சூழப்பட்ட தேசம் :

வடக்கில் லெபனானும் சிரியாவும் இஸ்ரேலுக்கு அண்டை நாடுகளாக இருக்கின்றன. இஸ்ரேல் அயல் நாடுகள் எதனுடனும் நல்லுறவில் இல்லை. லெபனான் அரசும் எதிராக இருக்கிறது. அந்த நாட்டிலிருந்து செயல்படும் ஹிஸ்புல்லா அமைப்பினரும் தாக்கிக்கொண்டே இருக்கிறார்கள்.

மறுபுறமுள்ள சிரியாவில் உள்நாட்டுப் போர் இன்னமும் நடக்கிறது. அங்கிருக்கும் அரசு படைகளும், எதிர்த்துப் போரிடும் அமைப்பினரும் இஸ்ரேலுடன் முரண்பட்டே வருகின்றனர்.

இஸ்ரேலின் கிழக்கில் ஜோர்டானும் ஈராக்கும் இருக்கின்றன. இரண்டுமே முன்னைய எதிரிகள் தான். சமீப ஆண்டுகளில் ஈராக்கில் ஸ்திரமற்ற சூழல் நிலவுவதால், அந்த வழியாகவும் அச்சுறுத்தல் இருக்கிறது. தெற்கில் இருக்கும் எகிப்து, சமீப காலமாகத்தான் இஸ்ரேலுடன் அமைதியைப் பேணுகிறது. எப்போதும் முற்றுகையில் இருக்கும் ஒரு தேசத்துக்கு இராணுவ பலம் முக்கியம். ஆண்களைப் போலவே பெண் வீராங்கனைகளையும் கட்டாய இராணுவ சைவையாற்ற, போர் முனைக்கு அனுப்பும் சில நாடுகளில் இஸ்ரேலும் ஒன்று.

ஆயினும் இப்போது கட்டாய இராணுவ பணியை மறுக்கும் இஸ்ரேலியர் இளம் இளைஞர்களின் போராட்டம் வலுப்பெற்று வருகிறது.

அதேவேளை தற்போது முனைப்புப் பெற்றுள்ள போரை எதிர்க்கும் இஸ்ரேலிய அன்னையர்களின் செயற்பாடும் ஆளும் இஸ்ரேலிய அரசுக்கு பெருந்தலையிடியாக மாறியுள்ளது.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**
அவுஸ்திரேலியா

# இந்தியாவிடம் எதிரிநாடுகள் இனிமேல் வாலாட்ட முடியாது!



இந்தியா சில தினங்களுக்கு முன்னர் 'அக்னி 5' ஏவுகணை சோதனையை வெற்றிகரமாக நடத்தியுள்ளது. பல்வேறு இலக்குகளை துல்லியமாக தாக்கிவிட்டு திரும்பி வரும் தொழில்நுட்பம் கொண்டதாக அக்னி 5 ஏவுகணை தயாரிக்கப்பட்டுள்ளது. இதுவரை அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா ஆகிய நாடுகளிடம் மட்டுமே இந்த அதிநவீன தொழில்நுட்பம் உள்ள நிலையில், தற்போது அந்தப் பட்டியலில் இந்தியாவும் இணைந்துள்ளது.

'இந்தியாவிலேயே உருவாக்கப்பட்ட தரம் உயர்த்தப்பட்ட அக்னி 5 ஏவுகணை சோதனை வெற்றி அடைந்ததன் மூலம் நமது விஞ்ஞானிகளின் சாதனை பெருமையளிக்கிறது' என்று பிரதமர் நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

'மிஷன் திவ்யஸ்திரா' என்ற இத்திட்டத்திற்காக பணியாற்றிய இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவன (DRDO) விஞ்ஞானிகளை நினைத்து பெருமிதம் கொள்கிறேன் எனவும் நரேந்திர மோடி பதிவிட்டுள்ளார்.

எம்.ஐ.ஆர்.வி ( Multiple Independently Targetable Reentry Vehicle MIRV) தொழில்நுட்பம் மூலம் செயல்படும் இந்த ஏவுகணையில் இருந்து ஆயுதங்களைப் பல திசைகளில் பல வேகத்தில் இட முடியும் என்பதே இதன் சிறப்பாகும்.

இந்தியா ஏற்கனவே அக்னி 1 முதல் 4 ஏவுகணைகளை வெற்றிகரமாக பரிசோதித்துப் பார்த்துள்ளது. இவை 700 கி.மீ முதல் 3,500 கி.மீ தொலைவு வரை சென்று தாக்கவல்லவை. ஆனால் அக்னி 5 ஏவுகணையின் தாக்குதிறன் அவற்றையெல்லாம் விட மிகவும் அதிகமாகும்.

அக்னி 5 ஏவுகணை நான்கு முதல் ஆறு அணு ஆயுதங்களை சுமந்து செல்லும் திறன் கொண்டது. அதிலும், ஒவ்வொன்றும் தனித்தனி இலக்கைத் தாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. உலகில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சில நாடுகளிடம் MIRV திறன் உள்ளது.

அக்னி5 ஏவுகணைகள் 5,000 கி.மீ தூரம் வரை சென்று தாக்கும் திறன் கொண்டவை. மேலும் இது சீனாவின் வடக்குப் பகுதி மற்றும் ஐரோப்பாவின் சில பகுதிகள் உட்பட ஏறக்குறைய ஆசியா முழுவதையும் தாக்கும் எல்லைக்குள் கொண்டு வர முடியும். இந்தியாவின் தேசிய பாதுகாப்பை இந்த ஏவுகணை பெரிதும் மேம்படுத்தும் என்பது குறிப்பிடத்தக்கது.



**அணுஆயுதங்களைச் சுமந்தவாறு ஐயாயிரம் கி.மீ தூரம் வரை சீறிப்பாய்ந்து துல்லியமாகத் தாக்கும் அக்னி_5 ஏவுகணை வெற்றிகரமாக பரிசோதனை!**

இந்தியா ஏற்கனவே அக்னி 5 ஏவுகணை தொடர்பான பல சோதனைகளை மேற்கொண்டுள்ளது. இருப்பினும் MIRV தொழில்நுட்பம் மூலம் மேற்கொள்ளப்பட்ட முதல் ஏவுகணை சோதனை இதுவாகும். இந்த அமைப்பில் உள்நாட்டு ஏவியோனிக்ஸ் அமைப்புகள் மற்றும் உயர் துல்லிய சென்சர் தொகுப்புகள் உள்ளன. அவை துல்லியத்துடன் இலக்குப் புள்ளிகளை அடைவதை உறுதி செய்கின்றன.

'மிஷன் திவ்யஸ்திரா' திட்டத்தில் பெண்கள் குறிப்பிடத்தக்க பங்களிப்பை கொடுத்துள்ளனர் என்றும், இந்தத் திட்டத்திற்கு ஒரு பெண் தலைமை இயக்குநராக உள்ளார் என்றும் அரசாங்க வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.

இதேவேளை இந்தியாவில் இதுவரை மொத்தமாக ஐந்து ஏவுகணைகள் வெற்றிகரமாக சோதிக்கப்பட்டுள்ளன.

அக்னி 1:

1983 ஆம் ஆண்டு ஏவப்பட்ட அணு ஆயுதங்களை சுமந்து செல்லக்கூடிய ஏவுகணையான அக்னி 1, அக்னி வகை ஏவுகணைகளில் முதன்மையானது. 1,000 கிலோ எடையை சுமந்து செல்லும் திறன் கொண்டது. இது 700 கிலோமீட்டர் தூரம் சென்று தாக்கும் வல்லமை படைத்தது.

அக்னி 2:

1999 ஆம் ஆண்டு பரிசோதிக்கப்பட்ட அக்னி 2 ஒரு இடைநிலை தூர ஏவுகணை ஆகும். இது 1,000 கிலோ எடையை சுமந்து செல்லும். 20 மீட்டர் நீளம் கொண்ட இந்த ஏவுகணை 2,000 முதல் 2,500 கிலோமீட்டர் தூரம் வரை சென்று தாக்கும் திறன் கொண்டது. இரண்டு நிலைகளை கொண்ட இந்த ஏவுகணையில் மேம்பட்ட உயர் துல்லியமான வழிசெலுத்தல் அமைப்பும் பொருத்தப்பட்டுள்ளது.

அக்னி 3:

அக்னி 3 என்பது ஒரு இடைநிலை தூர ஏவுகணை. 3,500 கிலோமீட்டர் வரை சென்று தாக்கக் கூடியது. இரண்டு நிலைகளை கொண்ட இந்த ஏவுகணை 1,500 கிலோ எடையை சுமந்து செல்லக் கூடியது. இந்த ஏவுகணை 2011 ஆம் ஆண்டு ஆயுதப்படையில் இணைக்கப்பட்டது.

அக்னி 4:

4,000 கிலோமீட்டர் வரை சென்று தாக்கும் திறன் கொண்ட அக்னி4 20 மீட்டர் நீளம் கொண்டது. இந்த ஏவுகணை 1,000 கிலோ எடையை சுமந்து செல்லும். இது 2012 ஆம் ஆண்டு வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.

**ஒரே ஏவுகணையினால் பல்வேறு இலக்குகளை குறிவைத்து தாக்கும் ஆற்றல்!**

ஏவுகணை சோதனையில் தோல்வி அடைந்த பாகிஸ்தான் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பாகிஸ்தான் 2.750 கி.மீ தொலைவு வரை சென்று தாக்கும் திறன் கொண்ட ஷாஹீன் III ஏவுகணையைப் பயன்படுத்தி எம்.ஐ.ஆர்.வி தொழில்நுட்பத்தை உருவாக்க முயற்சித்தது, ஆனால், இந்தத் திட்டம் தோல்வி அடைந்தது.

இந்தியாவில் அணு ஆயுதங்களை ஏந்திச் சென்று தாக்குதல் நடத்துவதற்காக ஏவுகணைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இந்திய நாட்டின் பாதுகாப்பிற்காக இந்த ஏவுகணைகள் எல்லாம் பயன்படுத்த தயார் நிலையில் இருக்கின்றன. இந்த ஏவுகணைகள் எல்லாம் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப மேம்படுத்தப்பட்டு கொண்டே வருகின்றன.

இந்தியாவிற்கு தற்போது மிகப்பெரிய அளவில் அச்சுறுத்தல் மிக்க நாடாக சீனா உள்ளது.

எதிர்காலத்தில் போர் என்று வந்தால் சீனாவுடன் போரிட இந்தியா தற்போதே தயாராக வேண்டியுள்ளது. அதற்காக பல்வேறு ஆயத்தப் பணிகளை இந்திய இராணுவம் செய்து வருகிறது. தற்போது இருக்கும் அக்னி 3 என்ற ஏவுகணையை வைத்து சீனாவின் வடதுருவத்தில் உள்ள பகுதியையும் கிழக்கு துருவத்தில் உள்ள பகுதியையும் சரியாக குறி வைத்து தாக்குதல் நடத்துவது என்பது முடியாத காரியமாக இருக்கிறது.

இதனால் இந்திய இராணுவம் அக்னி 5 என்ற புதிய ஏவுகணை ஒன்றை தயாரிக்கும் பணியை தொடங்கியது. இந்தியாவிற்காக ஆயுதங்களை தயாரித்து தரும் டி.ஆர்.டி.ஓ என்ற அமைப்புதான் இந்த அக்னி 5 ஏவுகணை தயாரிப்பை முழுமையாக ஏற்று நடத்தியது. இந்நிலையில் 'மிஷன் திவ்யாஸ்ரா' என்ற பெயரில் இந்த ஏவுகணை சோதனை வெற்றிகரமாக நடந்துள்ளது.

அக்னி 5 ஏவுகணை தற்போது தான் புறப்பட்ட இடத்திலிருந்து சுமார் 5000 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இலக்கை துல்லியமாக தாக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. இது மட்டுமல்ல இந்த ஏவுகணை தான் பயணிக்கும் பாதையில் உள்ள மற்ற சில இலக்குகளையும் தாக்கும் வல்லமை கொண்டது. அதாவது ஒரே ஏவுகணை பல்வேறு விதமான இலக்குகளை குறிவைத்து தாக்கும் திறன் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஏவுகணை முழுமையாக இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட ஏவுகணை ஆகும். இந்த ஏவுகணையின் பயன்படுத்தப்பட்டுள்ள தொழில்நுட்பம் எதுவும் வெளிநாட்டிலிருந்து பெறப்படவில்லை. இது மட்டுமல்ல இந்த ஏவுகணையில் அதிக துல்லியம் கொண்ட சென்சர்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் இந்த ஏவுகணை வைக்கப்பட்ட குறியை மிகத் துல்லியமாக தாக்கும் திறன் கொண்டதாக உள்ளது.

அமெரிக்கா, ரஷ்யா, சீனா, இங்கிலாந்து,



பிரான்ஸ் ஆகிய நாடுகளிடம் மட்டுமே இவ்வாறான ஏவுகணைகள் முன்னர் இருந்தன. தற்போது இந்தியாவிடமும் இந்த ஏவுகணை உள்ளது. இந்த ஏவுகணையை தயாரிக்க இந்தியா ரூபா 2500 கோடியை செலவு செய்துள்ளது.

இந்திய இராணுவம் என்பது தற்போது பலம் பொருந்தியதாக மாறி வருகிறது. இந்தப் பலத்துக்கு அக்னி 5 ஏவுகணை மிக முக்கியமான ஒரு ஆயுதமாக இருக்கும் என கணிக்கப்படுகிறது. இதை இந்திய இராணுவம் சோதனை செய்து வெற்றி பெற்றுள்ளது நிச்சயம் இந்தியர்களுக்கு ஒரு பாதுகாப்பு உணர்வைத் தருகிறது.

# அக்கரைப்பற்று பள்ளிவாசலில் நடைபெற்ற இரத்ததான முகாம்

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை இரத்த வங்கியில் காணப்படும் இரத்தத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யுமுகமாக அக்கரைப்பற்று தக்வா ஜும்ஆப் பள்ளிவாசலினால் ஏற்பாடு செய்யப்பட்ட 2024ஆம் ஆண்டிற்கான மாபெரும் இரத்ததான முகாம், பள்ளிவாசலின் தலைவர் எம்.எம்.றியாத் தலைமையில் அண்மையில் பள்ளிவாசல் மண்டபத்தில் நடந்தேறியது.

இப்பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர்களின் அயராத பெரும் முயற்சியினால் மூன்றாவது தடவையாகவும் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த இரத்தான முகாமில் ஆண்கள், பெண்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு எம்மதத்தினர் என்று பார்க்காமல் நல்நோக்கத்திற்காக தங்களது உதிரத்தை தானமாக வழங்கி இந்நிகழ்வின் வெற்றிக்கு பெரிதும் உதவினார்கள்.

தொடர்ச்சியாக இப்பிரதேச வைத்தியசாலைகளில் இரத்தத் தட்டுப்பாடு நிலவி வருவதை அவதானிக்க முடிகின்றது. அதனடிப்படையில் பள்ளிவாசல்கள், சமூக அமைப்புகள் இவ்வாறான சமூக தேவைகளை முன்னிறுத்தி குறிப்பாக இளைஞர், யுவதிகளின் பங்களிப்புடன் இப்பாரிய முயற்சியை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த இரத்தான முகாமில் 152 இரத்த நன்கொடையாளர்கள் கலந்து கொண்டு இரத்தம் வழங்கிய போதிலும், அதில் 137 பேரின் இரத்த சேகரிப்புகள் மாத்திரமே பாவனைக்காக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையினால் பெற்றுக்கொள்ளப்பட்டது.





இப்பள்ளிவாசல் நிர்வாக சபையானது இப்பிராந்தியத்தில் சமூக சேவை விடயங்களான இரத்தானம் வழங்கல், சிரமதான நிகழ்வு, வசதி குறைந்த மாணவர்கள் கல்வி கற்பதற்கான அத்தியாவசிய உபகரணங்கள் வழங்கல், பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவி வழங்கள் மற்றும் 24 மணி நேர அத்தியாவசிய அம்புலன்ஸ் வாகன வசதியையும் மூவின மக்களுக்கு இப்பள்ளிவாசல் நிர்வாக சபை கட்டணமின்றி செய்து வருகின்றமையை குறிப்பிட முடியும்.

**எம்.எஸ்.எம்.றிஸ்வான்**
(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

# அஞ்சல் திணைக்களத்தின் விழிப்பூட்டல் பேரணி





அஞ்சல் திணைக்களத்தின் புதிய நடைமுறையின்படி வியாபாரத்தை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் கல்முனை நகரை மையப்படுத்தி கல்முனை பிரதம அஞ்சல் அதிபர் யூ.எல்.எம். பைஸர் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்ச்சித் திட்டம் அஞ்சல் மா அதிபரின் எண்ணக்கருவின் அடிப்படையில் கிழக்கு மாகாண அஞ்சல் அதிபர் எம்.எச்.எம்.அஸ்லம் அவர்களின் வழிகாட்டலில் அக்கரைப்பற்று அம்பாறை பிராந்திய அஞ்சல் அத்தியட்சகர் கே.பி.எஸ்.பிரியந்தவின் பங்கேற்புடன் இடம்பெற்றது. பேரணியானது கல்முனை பிரதம அஞ்சல் அலுவலகத்திலிருந்து ஆரம்பமாகி தரவைப் பிள்ளையார் கோயில் வரை சென்று மீண்டும் கல்முனை அஞ்சல் அலுவலகம் வரை வந்தடைந்தது.

குறித்த பேரணியில் அஞ்சல் திணைக்களத்தின் புதிதாக நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் தொடர்பாக துண்டுப் பிரசுரங்கள் மூலம் கல்முனை நகரத்திலுள்ள வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்களுக்கு விரிவாக அறிவுறுத்தப்பட்டது.

**எம்.ஐ.எம்.அஸ்ஹர்**
(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

## இரு நாடுகளுக்கும் பயனளிக்கும் வகையில்...

பரிசும் வழங்கப்பட்டதுடன், இந்திய இலங்கை உறவுகளின் அண்மைக்கால சிறப்பம்சங்கள் அடங்கிய 'மைத்திரி' சஞ்சிகையும் ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட்டது.

இவ்விழாவில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியதாவது:

''இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் மத மற்றும் கலாசார ரீதியான பாரிய பிணைப்பு உள்ளது. மேலும் நமது இரு நாடுகளுக்கும் பொதுவான பாரம்பரியமும் உள்ளது.

நானும் இந்திய பிரதமர் நரேந்திர மோடியும் கூட்டாக கைச்சாத்திட்ட தொலைநோக்கு பிரகடனம் செயற்படுத்தப்படும் நிலையில் 75ஆவது ஆண்டு நிறைவு கொண்டாடப்படுவது விசேட அம்சமாகும். இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான உறவை பலப்படுத்தும் 'தொலைநோக்கு' அறிக்கையை தொடர்ச்சியாக முன்னெடுக்க உறுதிபூண்டுள்ளோம்.

இரு நாடுகளுக்கும் இடையிலான கலாசார மற்றும் மத உறவுகள், இரு நாடுகளும் ஜனநாயக நாடுகளாக இருப்பது, இரு நாடுகளுக்கும் பிரிட்டிஷ் சட்டக் கட்டமைப்பு இருப்பது போன்ற விடயங்கள் குறித்து நாங்கள் தொடர்ந்து பேசிவருகிறோம். ஆனால் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் பொருளாதார உறவை நாம் மறந்துவிட்டோம்.

அந்த உறவு கலாசார உறவுகளுக்கு அப்பாற்பட்டது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். மொஹஞ்சேதாரோ நாகரிக காலத்திலிருந்தே இந்தியாவில் இருந்து கப்பல்கள் இலங்கைக்கு வந்ததாக கூறப்படுகிறது. குறிப்பாக தென்னிந்தியா மற்றும் இலங்கையில், அனுராதபுரம், தஞ்சாவூர், மதுரை மற்றும் காஞ்சிபுரம் ஆகிய நான்கு இராச்சியங்களும் தங்கள் பொருளாதார நலன்களைப் பொறுத்து ஒருவருக்கொருவர் கூட்டணி வைத்தன அல்லது ஒருவருக்கொருவர் சண்டையிட்டன.

இந்த மூன்று இந்திய இராச்சியங்களும் உலகின் கிழக்கு நாடுகளை அணுகுவதற்கு பல சந்தர்ப்பங்களில் திருகோணமலை துறைமுகம் ஒரு முக்கிய துறைமுகமாக மாறியது. முன்னேஸ்வரம் கோயில், மாந்தையிலுள்ள கேதீஸ்வரம் கோயில், நகுலேஸ்வரம் கோயில், திருகோணமலையில் உள்ள கோணேஸ்வரம் கோயில் உள்ளிட்ட அனைத்து ஆலயங்களிலும் கிடைத்த நாணயங்கள், இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தக உறவுகளையும் இரு நாடுகளுக்கிடையிலான வர்த்தகம் பற்றியும் தெளிவுபடுத்துகிறது. அனுராதபுரத்தில் பழைய கிராமங்களில் மேற்கொண்ட அகழ்வாராய்ச்சியின் போது தென்னிந்திய வர்த்தக அமைப்புகளால் வெளியிடப்பட்ட நாணயங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இலங்கை ரூபா மற்றும் இந்திய ரூபாயின் பாவனை தொடர்பான உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதற்கு முன்னரே, கடந்த காலங்களில் மக்கள் வர்த்தகப் பரிவர்த்தனைகளுக்குப் பொதுவான நாணயத்தைப் பயன்படுத்தியதை இது காட்டுகிறது. அதற்கேற்ப, இருநாட்டு உறவுகளை வலுப்படுத்த நாம் இப்போது உழைக்க வேண்டும். போக்குவரத்து மற்றும் எரிசக்தி ஆகிய அனைத்து துறைகளிலும் இரு நாடுகளுக்கும் இடையே உறவுகளை மேம்படுத்த வேண்டும்.

தென்னிந்தியாவுக்கு வசதியாக இலங்கையின் மூலோபாய அமைவிடத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட வேண்டும். அதன்படி, தென்கிழக்காசியா மற்றும் வங்காள விரிகுடாவின் பிராந்தியங்கள் அபிவிருத்தியடைந்து வரும் நிலையில் திருகோணமலையின் மீள் அபிவிருத்தி தொடர்பில் எமது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

வங்காள விரிகுடா பிராந்தியத்தின் மூலோபாய மதிப்பு காரணமாக, கொழும்பு துறைமுகத்தின் பயன்பாடு தற்போது மேம்பட்டு வருகிறது. இதன் ஊடாக இலங்கைக்கு எவ்வாறு பயன்களைப் பெறுவது மற்றும் இலங்கையிடம் உள்ள மேலதிக புதுப்பிக்கத்தக்க ஆற்றலை இந்தியாவுக்கு எவ்வாறு வழங்குவது என்பது தொடர்பில் செயற்பட்டு வருகிறோம்.

சுற்றுலாத்துறையில் கவனம் செலுத்துகையில் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளும், இந்தியாவுக்கு அடிக்கடி வரும் இலங்கையர்களும் உள்ளனர். இந்தியாவில் இருந்து இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதைப் போன்றே இலங்கையில் இருந்து திருப்பதி, அயோத்தி, குருவாயூர் போன்ற இடங்களுக்கு இலங்கை சுற்றுலாப் பயணிகளும் அதிகமாக செல்கின்றனர்.

நாம் ஒன்றிணைந்து செயல்பட்டால் இந்து சமுத்திரம் வளர்ச்சி அடையும் போது நமது நாடும் வளர்ச்சி அடையும். நாம் பொருளாதார ஒருங்கிணைப்பை நோக்கி நகர்ந்து வருகிறோம். ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரிட்டன் இணைந்த போது பின்பற்றியதை நாம் இங்கு செய்யக்கூடாது. அதிலிருந்து வெளியேறுவதாக பின்னர் அவர்கள் முடிவு செய்தனர். மேலும் இந்தியாவுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் செய்துகொள்ளவது குறித்து இன்னும் அவர்கள் ஆராய்ந்து வருகின்றனர். அந்த விடயம் நடக்குமா நடக்காதா என்று தெரியவில்லை. இருப்பினும், நமக்கு இருக்கும் வாய்ப்புகளை நாம் உணர வேண்டும். இந்தியாவுடன் இணைந்து எவ்வாறு முன்னேறுவது என்பதை நாம் சிந்திக்க வேண்டும். இது மிகவும் எளிதான செயல் எனலாம்.

பெங்களூரில் இருந்து ஒருவர் ராஜஸ்தானுக்கு செல்வதை விட எளிதாக விடுமுறைக்கு இலங்கைக்கு வரலாம். ராஜஸ்தானை அடைய இரண்டு மணி நேரம் ஆகும். ஆனால் இலங்கையை அடைய ஒரு மணி நேரம் மட்டுமே செல்லும்.

கைத்தொழில் நடவடிக்கைகளைப் போன்றே இந்த அனைத்து நடவடிக்கைகளிலும் விநியோகச் சங்கிலிகளை நிறுவுவதற்கான வாய்ப்பும் உள்ளது. இந்து சமுத்திரம் தற்போது வளர்ச்சியடைந்து வருகிறது. இந்தியா, இந்தோனேசியா, ஈரான், சவூதி அரேபியா போன்ற ஏனைய நாடுகள் வேகமாக வளர்ந்து வருகின்றன.

அப்போது இந்து சமுத்திர வலயம் பொருளாதார மையமாக மாறும். அடுத்த 50, 60 ஆண்டுகளில், ஆபிரிக்க வலயமும் வளர்ச்சியடைவதால் அந்த மாற்றம் நிகழும். எனவே இந்தப் பணியை நாம் இப்போதே தொடங்க வேண்டும். இரு நாடுகளுக்கும் இடையே அரசியல் உறவுகள் உள்ளன. இந்த அனைத்து துறைகளிலும் நமது இரு நாடுகளும் நெருக்கமாக உள்ளன. எனவே நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்து முன்னேற வேண்டும். இதன் மூலம் இரு நாடுகளுக்கும் பலன் கிடைக்கும்.

எனவே, எமது இரு நாடுகளுக்கிடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் கடந்த வருடத்தில் முன்னெடுத்த வேலைத் திட்டத்திற்காக இலங்கை இந்தியச் சங்கத்திற்கு நன்றி தெரிவிக்கின்றேன். மேலும் நாம் வெளியிட்டிருக்கும் இந்த 'தொலைநோக்கு' அறிக்கை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கிறேன்.'' என ஜனாதிபதி தெரிவித்தார்.


## இன்றைய பலன்கள்

(16.03.2024)




கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
உயர் அதிகாரியின் விருப்பப்படி முக்கிய காரியம் ஒன்றை உடனே செய்து கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகும்.



**ரிஷபம் :**
அவசியமான பணிகளை விரைவாக செய்து பாராட்டு பெறுவீர்கள். சொந்த தொழில் செய்பவர்கள் உதவியாளர்களின் துணையுடன் கடினமான வேலை ஒன்றை செய்து கொடுத்து வாடிக்கையாளர்களிடம் பாராட்டை பெறுவர்.




**மிதுனம்:**
சொந்த தொழில் செய்பவர்களுக்கு புதிய வாடிக்கையாளர்கள் அறிமுகமும் அவர்களால் வருமானமும் கிடைக்க பெறும்.



**கடகம்:**
சக பணியாளர்களின் வேலையையும் சேர்த்து செய்ய வேண்டியது இருக்கும். சொந்த தொழில் செய்பவர்களுக்கு புதிய வாடிக்கையாளர்களின் அறிமுகம் ஏற்படும் .



**சிம்மம்:**
சொந்தத் தொழிலில் வேலைப்பழு அதிகரிக்கும். எனவே வாடிக்கையாளர்களுக்கு குறித்த நேரத்தில் பணியை முடித்துக் கொடுக்க முடியாமல் போகலாம்.




**கன்னி:**
தள்ளி வைத்த வேலையை உடனே செய்யும்படி ஆகலாம். சொந்த தொழில் செய்பவர்களுக்கு தொழில் ரீதியான நன்மைகள் ஏற்படலாம்.




**துலாம்:**
சிலருக்கு மேல் அதிகாரிகளிடமிருந்து சலுகைகள் கிடைக்கப்பெறும். சொந்த தொழில் செய்பவர்கள் வேலைப்பளு காரணமாக ஓய்வின்றி உழைக்கும் நிலை உருவாகும்.



**விருச்சிகம்:**
பணிகளில் அதிக கவனம் செலுத்தாவிட்டால் தவறுகளுக்கு பதில் சொல்ல நேரிடும். சொந்த தொழில் செய்பவர்கள் செய்யும் பணிகளில் கவனமாக இருந்தாலும் சிறு சிறு தவறுகள் ஏற்படுத்தாமல் செய்யும்.



**தனுசு:**
உத்தியோகத்தில் உள்ளவர்கள் எதிர்பார்த்த முக்கிய காரியங்கள் சிறப்பாக நடைபெறும். சிலருக்கு பாராட்டும் விருதும் கிடைக்கலம்.



**மகரம்:**
உத்தியோகத்தில் உள்ளவர்கள் தங்கள் பொறுப்புகளில் கவனமாக இல்லாவிட்டால் உயர் அதிகாரிகளின் கோபப்பார்வைக்கு இலக்காககூடும்.



**கும்பம்:**
சக பணியாளர்களின் குடும்ப விஷயங்களில் தலையிடுவது பிரச்சினையை உருவாக்கும். சொந்தத் தொழில் செய்பவர்கள் நவீன கருவிகளை பயன்படுத்தி பணிகளை விரிவாக செய்து கொடுப்பர்.



**மீனம்:**
வரவேண்டிய கடன் தொகைகள் தள்ளிப்போகும். சொந்த தொழில் செய்பவர்களுக்கு பணிச்சுமை அதிகரிக்கும்.



## சிறு குற்றமிழைத்தோருக்கு...

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவிததார். அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் 107 புதிய சட்டமூலங்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடிந்துள்ளது.

2022ஆம் ஆண்டு 29 புதிய சட்டமூலங்களையும், 2023ஆம் ஆண்டு 78 புதிய சட்டமூலங்களையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடிந்தது.

இதற்கமைய 107 சட்டமூலங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. நீதி அமைச்சின் வரலாற்றில் இக்காலப்பகுதியிலே அதிக எண்ணிக்கையிலான சட்டங்கள் திருத்தப்பட்டுள்ளன.

சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளை நாட்டுக்குப் பயனுள்ள குழுவாக மாற்ற முடிந்தது. அரசு மற்றும் தனியார் துறையினரின் பங்களிப்புடன், சிறைச்சாலைகளுக்குள்ளேயே கைதிகள் தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இதன்படி வெலிக்கடை, மஹர மற்றும் அகுனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலைகளில் இந்தத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இதன் மூலம் பாதணிகள், நுளம்புச் சுருள்கள் உள்ளிட்ட பல பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. 2023ஆம் ஆண்டில் கைதிகளின் உழைப்புடன் விவசாயம் மற்றும் கைத்தொழில்துறை மூலம் 116 மில்லியன் ரூபா வருமானத்தை பெற முடிந்துள்ளது.

மேலும், வீட்டுக்காவலில் வைப்பதன் மூலம் தண்டனைக் காலத்தை நிறைவு செய்வதற்கான வாய்ப்பு தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதற்காக உச்ச நீதிமன்ற நீதியரசர் யசந்த கோதாகொட தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை எமக்கு கிடைத்துள்ளது.

நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ அதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுள்ளார். இது தற்போது சட்ட வரைஞர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த வருடத்தினுள் அதனைச் சட்டமாக்க முடியும் என நம்புகிறோம். இதன் ஊடாக சிறைச்சாலைகளில் காணப்படும் நெரிசல் மற்றும் உணவுப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்பதைக் குறிப்பிட வேண்டும்"என்றார்.

## பிணையில் விடுதலை செய்ய கோரி...

நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். அந்த வகையில் மேற்படி மனு தொடர்பில் எதிர்வரும் திங்கட்கிழமை நீதிமன்றத்தில் ஆராயப்பட்டுள்ளது.

ஏற்கனவே அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட ஏழு பேரின் மனு தொடர்பான பிணைக் கோரிக்கையை மாளிகாகந்த நீதவான் நீதிமன்றம் கடந்த இரண்டு தினங்களுக்கு முன் நிராகரித்தது.

அந்த வகையில் முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல மற்றும் அமைச்சின் முன்னாள் செயலாளர் உள்ளிட்டோருக்கு மேற்படி தரமற்ற தடுப்பூசி மருந்து கொள்வனவு வழக்கு நிறைவடையும்வரை பிணை வழங்க முடியாது என்று தெரிவித்து நீதிமன்றம் அவர்களது கோரிக்கையை நிராகரித்துள்ளது.

மேற்படி வழக்கு கடந்த இரண்டு தினங்களுக்கு முன் மாளிகாகந்த மஜிஸ்திரேட் நீதிமன்ற நீதவான் லோச்சனி அபேவிக்ரம முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக ஸ்ரீசந்திரகுப்த உள்ளிட்ட 7 பேரின் பிணை நிராகரிக்கப்பட்டது.

இந்தப் பின்னணியில் நேற்று அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல மீண்டும் தம்மை பிணையில் விடுதலை செய்யுமாறு கோரி மேல் நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனைவி எதிர்வரும் திங்கட்கிழமை ஆராய்வதற்கு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

## இந்தியா, சீனா, ஜப்பான் நாடுகள்...

சீனா வழங்கும் 1,500 மில்லியன் ரூபாவில் கடற்றொழிலாளர்களின் வீட்டுத்திட்டத்துக்கு 500 மில்லியன் ரூபாவும், கடற்றொழிலாளர் சமூகத்துக்கு அரிசி விநியோகத்துக்காக 500 மில்லியன் ரூபாவும், கடற்றொழிலாளர்களுக்கான மீன்பிடி உபரகணங்கள் வழங்குவதற்காக 500 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 22ஆம் திகதி சீனா செல்லும் பிரதமர் தினேஷ் குணவர்தன, இதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ளதாக தான் நம்புவதாகவும், அமைச்சர் டக்ளஸ் தெரிவித்தார். இதேவேளை இந்திய அரசாங்கமும் வடமாகாணத்தின் அபிவிருத்திகளுக்காக 3,000 மில்லியன் ரூபா நிதியை வழங்க முன்வந்துள்ளது.

கடல் ஆய்வு நடவடிக்கை, கடற்பகுதியில் பாரிய கூடுகளில் மீன் வளர்க்கும் திட்டம், மக்களுக்கான அபிவிருத்தி நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்காக இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஜப்பான் அரசாங்கமும் வடக்கின் அபிவிருத்தி மற்றும் கடல் பாதுகாப்பு செயற்றிட்டங்களுக்காக 415 மில்லியன் ரூபாவை வழங்க முன்வந்துள்ளதாகவும், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்தார்.

## விசேட வெடிபொருள் அகற்றும்...

உடைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன (ஓய்வு) உள்ளிட்டோருக்கிடையில் இதற்கான ஒப்பந்தம் கடந்த புதன்கிழமை (13) கைச்சாத்தனது.

18 REOD 4,000 வெடிகுண்டு அகற்றும் நடுத்தர ரோபோக்கள், 18 REOD 400 வெடிக்கும் ஆயுதங்களை அகற்றும் ரோபோக்கள், 10 வெடிப்பு எதிர்ப்பு போர்வைகள் மற்றும் 10 வெடிப்பு பாதுகாப்புத் தாங்கிகள், வாகனங்கள் உள்ளிட்டவற்றை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்னவிடம் (ஓய்வு) இலங்கைக்கான சீன மக்கள் குடியரசுத் தூதுவர் கியூ சென்கொங் வழங்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து இராணுவத் தளபதியிடம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன (ஓய்வு) ஒப்படைத்தார். இந்நிகழ்வின் ஆரம்பத்தில் இரு நாடுகளின் இராணுவத்தினருக்கு இடையில் நிலவும் நல்லெண்ணம் மற்றும் புரிந்துணர்வை வெளிப்படுத்தும் ஒரு சிறிய வீடியோவும் காட்சிப்படுத்தப்பட்டது.

இவ்வாறு வழங்கப்பட்ட உபகரணங்களை சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் அழைப்பாளர்கள் மிகவும் உன்னிப்பாக பார்வையிட்டனர்.

## வயல் காணிகளை நிரப்புவதற்கு...

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். அதற்கு அனுமதி வழங்கப்போவதில்லை என அரசாங்கம் கொள்கை ரீதியான தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாகவும் அதனை முறையாக கடைப்பிடிக்குமாறு தான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். மேல் மாகாணத்திலேயே இவ்வாறான பெருமளவு காணிகள் காணப்படுவதாகவும் அதனால் பெருமளவிலானோர் காணிகளை நிரப்பி வேறு விடயங்களுக்கு பயன்படுத்துவதற்கு அனுமதி கோரி வருவதாகவும் தெரிவித்துள்ள அவர், அரசாங்கம் அது தொடர்பில் கொள்கை ரீதியான தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இனிமேல் எந்த வகையிலும் அவ்வாறான செயற்பாடுகளுக்கு பரிந்துரைகளை முன்வைக்கக் கூடாது என்றும் அமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். மேல் மாகாணத்தில் பல்வேறு பிரதேசங்களிலும் வீதியின் இரு மருங்கிலும் உள்ள வயல் காணிகளை இவ்வாறு நிரப்பும் நடவடிக்கைகள் பலரால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தாம் அது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அறிவித்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## சிறிய ரக முச்சக்கர வண்டியை...

முதலாவது பிறந்ததினத்துக்கு பரிசு வழங்கும் நோக்கிலேயே அவர் இதனை தயாரித்துள்ளதாக, அவர் தெரிவித்துள்ளார்.

34 வருடங்களாக முச்சக்கரவண்டித் தொழிலில் தனது 03 பிள்ளைகளுடன் இணைந்து தான் ஈடுபட்டு வருவதாகவும் தனது நீண்டகால தொழில் அனுபவத்தை பயன்படுத்தி இந்த முச்சக்கரவண்டியை தயாரித்துள்ளதாகவும், பொன்னையா உதயகுமார் தெரிவித்தார்.

தனது பேரப்பிள்ளையின் பெயர், பிறந்த திகதியை வைத்து முச்சக்கர வண்டிக்கான இலக்கத்தகட்டையும் தயாரித்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார். தான் தயாரித்த இந்த முச்சக்கரவண்டிக்கு தற்போது வெளிநாடுகளிலும் கேள்வி உள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

## பிரதி சபாநாயகர் அல்லது எம்.பி. ஒருவரின்...

என எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது. கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் பின்னர் எதிர்க்கட்சிகளின் சார்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தை எதிர்வரும் 19 மற்றும் 20ஆம் திகதிகளில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அதன் மீதான வாக்கெடுப்பை 20ஆம் திகதி மாலை நடத்தவும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உட்பட 44 எதிர்க்கட்சி எம்பிக்கள் கையொப்பமிட்டுள்ளனர்.

அந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை அண்மையில் பாராளுமன்ற பிரதி செயலாளர் நாயகத்திடம் கையளிக்கப்பட்டிருந்தது.

நிகழ்நிலை காப்பு சட்டமூலம் உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைக்கு முரணாக நிறைவேற்றப்பட்டதாக எதிர்க்கட்சிகள் முன்வைத்த ஆட்சேபனையை புறக்கணித்து ஆளும் கட்சியின் தேவைக்கு ஏற்ப அதன் சரத்துக்களை நிறைவேற்ற சபாநாயகர் இடமளித்தார் என குற்றஞ்சுமத்தியே எதிர்க்கட்சியினால் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படவுள்ளது.

## இந்திய பாராளுமன்ற தேர்தல்...

தொடர்ந்து ஏப்ரல், மே மாதங்களில் பாராளுமன்ற தேர்தலை நடத்த தலைமை தேர்தல் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது. இந்நிலையில், 2024ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலுக்கான அட்டவணையை இன்று மாலை 3 மணிக்கு வெளியிட உள்ளதாக இந்திய தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. ஒவ்வொரு ஐந்து ஆண்டும் 543 தொகுதிகள் கொண்ட இந்தியாவின் பாராளுமன்றத் தேர்தல் அந்நாட்டின் மிகப்பெரிய ஜனநாயகத் திருவிழாவாகவே இடம்பெறுகிறது. தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டால் அரசியல் களத்தில் பிரசாரங்கள் தொடங்கிவிடும். தேர்தலை முன்னிட்டு இப்போதே தேசியக் கட்சிகள் தத்தம் வேட்பாளர்களை அறிவிக்கத் தொடங்கிவிட்டன. இந்தியாவில் பாரதிய ஜனதாக்கட்சி இதுவரை இரண்டு கட்டங்களாக 267 வேட்பாளர்களை அறிவித்துள்ளது. காங்கிரஸ், ஆம் ஆத்மி போன்ற தேசியக் கட்சிகளும் வேட்பாளர்களை அறிவித்துள்ளன. மாநிலக் கட்சிகளும் கூட்டணி, வேட்பாளர் அறிவிப்பை தீவிரப்படுத்தியுள்ளன. மேற்குவங்கத்தில் மம்தா 42 தொகுதிகளிலும் தனித்துப் போட்டி என அறிவித்துள்ளார். புதிய இந்திய தேர்தல் ஆணையர்களாக சுக்வீர் சிங் சந்து, ஞானேஷ் குமார் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாரிய இழுவைப் படகொன்றுடன்...

கைப்பற்றப்பட்டுள்ளது. காரை நகர் கடற்பரப்பில் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே, இக்கடற்றொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். காங்கேசன்துறை கடற்படை முகாமில் இக்கடற்றொழிலாளர்களிடம் விசாரணை முன்னெடுக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, மயிலிட்டி துறைமுகத்தில் வைத்து கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளிடம் இவர்களை ஒப்படைக்க கடற்படையினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பெரிய வெங்காயத்துக்கு...

செய்வது தொடர்பான கலந்துரையாடல், அத்தியாவசிய பொருள் இறக்குமதியாளர்களுக்கும் வர்த்தக அமைச்சருக்கும் இடையில் நேற்று முன்தினம் நடைபெற்றதுடன், தமது கையிருப்பிலுள்ள பெரிய வெங்காயத்தை 450 ரூபா முதல் 500 ரூபாவுக்கு இடையில் விற்பனை செய்ய இறக்குமதியாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்த அமைச்சர்,

"அத்தியாவசிய பொருள் இறக்குமதியாளர்களுடனான கலந்துரையாடல் வெற்றியடைந்துள்ளதுடன், போட்டி விலையில் தமது பொருட்களை உள்ளூர் சந்தைக்கு வழங்க அவர்கள் இணங்கியுள்ளனர்.

பெரிய வெங்காய இறக்குமதிக்கு பாகிஸ்தான் கட்டுப்பாடு விதித்துள்ளதாக இறக்குமதியாளர்கள் தெரிவித்தனர். எனினும் துருக்கி உள்ளிட்ட பிற நாடுகளிலிருந்து பெரிய வெங்காயத்தை இறக்குமதி செய்வதுடன், கையிருப்பிலுள்ள வெங்காயத்தை பண்டிகைக் காலத்தில் குறைந்த விலையில் வழங்கத் தயாராக உள்ளோம்" என்றார்.

## இலங்கையின் எல்லையில் எந்தவொரு...

தொடர்பில் தெரிவிக்கையில், இலங்கையானது நாட்டின் எல்லையில் இராணுவத்தளம் அமைப்பது தொடர்பில் சீனா உட்பட எந்த வெளிநாட்டு அரசாங்கங்களுடனும் இதுவரை எந்தவொரு பேச்சுவார்த்தையிலும் ஈடுபடவில்லை என்றார்.

அதேவேளை, எந்த ஒரு சர்வதேச நாடும் இலங்கையின் எல்லையில் இராணுவத் தளம் அமைப்பதற்கு அரசாங்கம் அனுமதி வழங்காது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவானது இந்த வார தமது வருடாந்த மதிப்பீட்டு அறிக்கையில் இலங்கை உட்பட பல்வேறு நாடுகளில் இராணுவத்தளங்களை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை சீனா ஆராய்ந்து வருவதாக தெரிவித்துள்ளது.

அந்த வகையில் இலங்கையில் சீன இராணுவத் தளத்தை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் அமெரிக்க புலனாய்வுத்துறை வெளியிட்டுள்ள அறிக்கை தவறானது என்றும் அந்த கூற்றை முற்றாக மறுப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

எந்த ஒரு வேளையிலும் தமது எல்லைக்குள் இராணுவத் தளங்களை அமைப்பதற்கு எந்தவொரு சர்வதேச நாட்டுக்கும் இலங்கை அனுமதி வழங்காது என்றும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தேசிய அரச வெசாக் வைபவம்;...

கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான ஆரம்பக்கட்ட பேச்சுவார்த்தை மாத்தளை மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போது அமைச்சர் இவ்விடயத்தை குறிப்பிட்டார். இதற்கமைவாக மே மாதம் 21ஆம் திகதி தொடக்கம் மே மாதம் 27ஆம் திகதி வரை பல்வேறு பௌத்த மத, கலாசார நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இதேவேளை, வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு கங்காராம விகாரையில் ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதமர் அலுவலகம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ள புத்த ரஷ்மி வெசாக் வைபவம் மே மாதம் 23, 24, 25 மற்றும் 26ஆம் திகதிவரை நடைபெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வெகுஜன ஊடக அமைச்சு இதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்யவுள்ளது.

# கிழக்கின் குரல்



## தேசிய மதிப்பீட்டிற்கு கல்முனை மாநகர சபை தெரிவு

(கல்முனை விசேட நிருபர்)



கிழக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களிடையே நடாத்தப்பட்ட 2023 ஆம் ஆண்டிற்கான செயற்திறன் மதிப்பீட்டில் கல்முனை மாநகர சபையானது கூடிய புள்ளிகள் பெற்று தேசிய மட்ட மதிப்பீட்டிற்கு தகுதி பெற்றிருப்பதாக மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி தெரிவித்தார். பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களம் என்பனவற்றின் கண்காணிப்பில் சுயாதீனமான நடுவர்கள் மூலம் மாகாண மட்டத்திலான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

கல்முனை மாநகர சபை நிர்வாகமானது கடந்த வருட ஆரம்பம் முதல் தொடர்ச்சியாக செயற்படுத்தி வந்த நிர்வாக சீர்படுத்தல்கள், சீரான ஆளணி முகாமைத்துவம், திட்டமிட்ட அடிப்படையிலான உட்கட்டமைப்பு விருத்திகள், நவீனமயப்படுத்தப்பட்ட முகப்பு அலுவலக வசதிகள் என்பவற்றோடு மாநகரசபையின் உத்தியோகத்தர்களின் அயராத முயற்சிகளின் பயனாக செயற்திறன் மதிப்பீட்டில் பாரிய வளர்ச்சி வீதத்தினை வெளிப்படுத்தியிருந்தது.

அதன் அடிப்படையிலேயே கடந்த காலங்களில் மிகவும் பின்தங்கிய நிலையிலிருந்து வந்த கல்முனை மாநகர சபையானது இம்மதிப்பீட்டில் முன்னிலைக்கு வந்திருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

## இறால் பண்ணையாளர்களுக்கு காணி ஒதுக்கீடு





(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

கிழக்கு மாகாணத்தின் மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூர் விவசாயிகளின் சிறிய அளவிலான இறால் பண்ணை திட்டங்களுக்கான காணிகளை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஒதுக்கீடு செய்தார்.

மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகம் பட்டிப்பளையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனும் கலந்து கொண்டார்.

இதன்போது பயனாளிகளுக்கான காணி அனுமதிப்பத்திரங்கள் ஆளுநரால் வழங்கி வைக்கப்பட்டன.

## வெளிநாட்டு சுற்றுலாப்பயணி யானை அடித்துக் கொலை

(காரைதீவு குறூப் நிருபர்)

வெளிநாட்டு சுற்றுலா பயணியொருவர் பொத்துவில் கோமாரியில் வைத்து யானையால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று(15) வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணியளவில் கோமாரி களுகொல்ல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

நேற்று அதிகாலை அவர் சகபாடிகளுடன் மோட்டார் சைக்கிளில் கோமாரி கடலை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த வேளை திடீரென்று வீதியால் வந்த யானை அவரை இழுத்து அடித்துக் கொன்றது. ஏனையவர்கள் தப்பி ஓடி விட்டனர்.

இவரது சடலம் தற்பொழுது பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சுமார் 52 வயது மதிக்கத்தக்க ஒருவரே இவ்வாறு கொலைசெய்யப்பட்டுள்ளார்.



திருகோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த பிரமோற்சவம் கொடியேற்றத்துடன் நேற்றுமுன்தினம் (14) ஆரம்பமாகியது. நேற்று மாலை அம்பாள் காராம்பசு வாகனத்தில் வெளிவீதி உலா வந்து அடியார்களுக்கு அருள்பாலித்தார்.

(படங்கள்: அன்புவழிபுரம் தினகரன் நிருபர்)

## குழந்தைகள் பராமரிப்பு நிலையத்திற்கு வருகை தந்த Unicef அதிகாரிகள்

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)



மட்டக்களப்பில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட அம்மா வீடு எனும் குழந்தைகள் பராமரிப்பு நிலையத்திற்கு ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் (UNICEF) அதிகாரி இனோகா பண்டாரகமகே உள்ளிட்ட குழுவினர் அண்மையில் விஜயம் செய்து நிலையத்தைப் பார்வையிட்டதோடு, விருந்தினர் பதிவேட்டிலும் தமது கருத்துகளையும் பதிவு செய்தனர்.

மனிதநேயம் நம்பிக்கை நிதியத்தின் நிதி அனுசரணையில் LIFT தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினால் நடாத்தப்படும் இந் நிலையத்தின் மூலம் நகர்ப்புறப் பெண்களுக்கான வேலைவாய்ப்பை உருவாக்குதல் மற்றும் வேலைக்குச் செல்லும் பெற்றோரின் குழந்தைகளுக்கான சிறந்த பராமரிப்பு சேவைகளை வழங்குதல் எனும் இரண்டு நோக்கங்கள் பூர்த்தி செய்யப்படுவதாக LIFT நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் திருமதி. ஜானு முரளிதரன் தெரிவித்தார்.

நிலையத்தில் காணப்படும் வசதிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள், சிறுவர் பாதுகாப்புக் கொள்கை மற்றும் பராமரிப்பாளர்கள் தொடர்பில் தான் மிகவும் திருப்தி அடைவதாகவும் UNICEF அதிகாரி இனோகா இதன்போது தெரிவித்துள்ளார். இச்சந்திப்பில் நிலையப் பொறுப்பாளர் உதயகுமாரி, நிதிநிர்வாக உத்தியோகத்தர் சந்திரா, LIFT நிறுவன உத்தியோகத்தர்கள், குழந்தைகள் பராமரிப்பாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## வவுணதீவுப்பிரதேச வறியவர்களுக்கு வாழ்வாதார ஊக்குவிப்பு உதவியாக தோணிகளும் சமையல் பாத்திரங்களும் வழங்கி வைப்பு

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)




மட்டக்களப்பு மாவட்டத்தில் வறுமையில் முதலிடம் பெற்ற வவுணதீவுப் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வாழ்வாதார ஊக்குவிப்பு உதவியாக தோணிகளும் சமையல் பாத்திரங்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளதாக அக்ஷன் யுனிற்றி லங்கா நிறுவன இணைப்பாளர் ரீ. றொபின்சன் மார்ஷல் தெரிவித்தார்.

சைல்ட் பண்ட் (Child Fund) நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் அக்ஷன் யுனிற்றி லங்கா தன்னார்வ வலுவூட்டல் நிறுவனத்தின் அமுலாக்கத்தோடு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு தோணிகளும் சமையல் பாத்திரங்களும் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வவுணதீவுப் பிரதேச செயலக வளாகத்தில் நடைபெற்றது.

வவுணதீவுப் பிரதேச செயலாளர் என். சத்தியானந்தி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மீனவர்களான பயனாளிகள் இருவருக்கு தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இரு தோணிகளும் மற்றொரு சமையல்காரரான பயனாளிக்கு சுமார் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான சமையல் பாத்திரங்களின் தொகுதியும் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் வவுணதீவுப் பிரதேச செயலக திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் எஸ். சபேஸ், வவுணதீவு முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளரும் ஏயு லங்கா நிறுவனத்தின் நிறைவேற்றுக் குழுச் செயலாளருமான கே. சத்தியநாதன் உள்ளிட்டோரும் பயனாளிகளும் கலந்து கொண்டனர்.

குடும்பத்தில் 5 வயதிற்குக் குறைந்த குழந்தைகள், வறுமை நிலை, தொழில் முயற்சிகளில் ஆர்வம், தாபரிப்புப் பிள்ளைகள் இருக்கும் குடும்பங்கள் போஷாக்கு, விசேட தேவைக்குட்பட்ட நிலைமைகள் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு வாழ்வாதார ஊக்குவிப்பு குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டதாகவும் பயனாளிகளின் 25 சத வீதமானோரின் பங்களிப்புடன் வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டதாகவும் செயற்றிட்டத்தின் இணைப்பாளர் ரீ. றொபின்சன் மார்ஷல் மேலும் தெரிவித்தார்.

## 'பெண்களில் முதலீடு செய்யுங்கள் முன்னேற்றத்தை விரைவுபடுத்துங்கள்'

### திருமலையில் சர்வதேச மகளிர் தினம் அனுஷ்டிப்பு

(தம்பலகாமம் குறூப் நிருபர்)



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு திருகோணமலை மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் கிராமிய பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி அமைப்பின் (RECDO) அனுசரணையுடன். சர்வதேச மகளிர் தின மாவட்ட கொண்டாட்டம் அண்மையில் மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

'பெண்களில் முதலீடு செய்யுங்கள்: முன்னேற்றத்தை விரைவுபடுத்துங்கள்" என்ற ஐக்கிய நாடுகள் சபையின் 2024 ஆம் ஆண்டுக்கான மகளிர்தின தொனிப்பொருளில் இந்நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. பெண்கள் எவ்வாறு கௌரவிக்கப்பட வேண்டும் அவர்களுடைய ஆற்றல் மற்றும் திறமைகள் என்னவென்ற விடயங்களை இந்நிகழ்வின் போது தெளிவுபடுத்தியமை குறிப்பிடத்தக்கது. இதன்போது திருகோணமலை மாவட்ட பெண்கள், சர்வதேச மகளிர் தினத்தில் பெண்கள் சார்பாக அரசாங்கத்திற்கு முன்வைக்கப்படும் கோரிக்கையை திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சியிடம் கையளித்தனர்.

இதன்போது பெண்களுக்கான கேள்விகள் கேட்கப்பட்டு வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன. கலை, கலாசார நிகழ்வுகளும் வெகு விமரிசையாக நடைபெற்றது. மேலும் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற பெண்களுக்கான இரண்டு நாள் செயலமர்வில் கலந்துகொண்ட பெண்களுக்கு பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவருமான கபில நுவன் அத்துகோரல, கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் ஆரியவதி கலப்பத்தி, மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ். அருள்ராஜ்,மாவட்ட செயலக பதவி நிலை அதிகாரிகள், தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி மற்றும் கந்தளாய் பிரதேச செயலாளர் உபேக்சா குமாரி என பலரும் கலந்து கொண்டனர்.

## திட்டமிடல் பணிப்பாளருடன் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சந்திப்பு



(சாய்ந்தமருது விசேட நிருபர்)

அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஏ முனாஸிரை அம்பாறை மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தொழிற்சங்க பிரதிநிதிகள் நேற்று மாவட்ட செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

அம்பாறை மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தொழிற்சங்கத் தலைவர் கபீர் கலீல் தலைமையில் நடைபெற்ற இச்சந்திப்பில் அதன் செயலாளர் எம்.அரூஸ் இஹ்லாஸ், மாவட்ட இணைப்பாளர் எல்.எம். சர்ஜுன், பிரதேச இணைப்பாளர் ஏ.சி. பர்ஹான் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர். இதன்போது மாவட்டத்தில் அமுல்படுத்தப்படவிருக்கும் அரச வேலைத்திட்டங்களில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வகிபாகம் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

## சாதனை மாணவன் தினுக்சன் பாராட்டிக் கௌரவிப்பு

(காரைதீவு குறூப் நிருபர்)



அகில இலங்கை பாடசாலை மாணவர்களுக்கிடையிலான சிறுவர் சித்திரப்போட்டியில் சாதனை படைத்த சம்மாந்துறை கோரக்கர் தமிழ் மகா வித்தியாலய மாணவன் ரீ.தினுக்சன் பாராட்டடிக் கௌரவிக்கப்பட்டார்.

சம்மாந்துறை / ஸ்ரீ கோரக்கர் தமிழ் மகாவித்தியாலயத்தில் இருந்து மாகாண மட்டத்தில் மூன்றாவது இடத்தைப் பெற்ற ரீ. தினுக்சன் என்ற மாணவனுக்கு அதிபர் எஸ். இளங்கோபன் தலைமையில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

பிரதம அதிதியாக சம்மாந்துறை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி நிதர்சினி மகேந்திரக்குமார் சான்றிதழை வழங்கி வைத்தார்.

நிகழ்வில் உதவிக் கல்விப் பணிப்பாளர் எச். நைறூஸ்கான் கோட்டக் கல்விப் பணிப்பாளர்களான ஏ. நசீர், பி. பரமதயாளன், சித்திர பாட வளவாளர் எஸ்.எல். அப்துல் முனாப், பாடசாலையின் அதிபர் எஸ். இளங்கோபன் சித்திரம் பாட ஆசிரியை செல்வி. என். லிசாந்தனி ஆகியோரின் முன்னிலையில் சான்றிதழ் வழங்கி வைக்கும் நிகழ்வு கல்லூரியில் நடைபெற்றது.

## அகத்தியர் வித்தியாலயத்தில் மாணவர்கள் பாராட்டு விழா



(மணல்சேனை நிருபர்)

சம்மாந்துறை கல்வி வலயத்துக்குட்பட்ட அகத்தியர் வித்தியாலயத்தில் 2023 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சாதனை படைத்த மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு அதிபர் எஸ்.சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. இப்பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் 4 மாணவர்களும் 70 புள்ளிக்கு மேல் 11 மாணவர்களும் பெற்றுள்ளனர்.

இந்நிகழ்வில் அதிதிகளாக வலயக்கல்விப்பணிப்பாளர் டொக்டர் உமர் மௌலானா, நாவிதன் வெளிப் பிரதேசசெயலாளர் செல்வி .இ.ராகுலநாயகி, பிரதிக்கல்விப்பணிப்பாளர்களான பி.எம்.யசீர் அறபாத், திருமதி என்.மகேந்திரகுமார் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து சிறப்பித்தனர்.











யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 38 ஆவது பட்டமளிப்பு விழா நேற்று யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இப்பட்டமளிப்பு விழாவில் கிளிநொச்சி மத்திய கல்லூரியின் ஆசிரியரும் உலகத்தமிழ்ப்பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக் கிளையின் தலைவரும் பிரபல கலை இலக்கிய நாடகச் செயற்பாட்டாளரும் மேநாள் கரைச்சி பிரதேச சபை உறுப்பினருமாகிய அருணாசலம் சத்தியானந்தம் பண்பாட்டியல் கற்கை நெறியில் முதுகலைமாணி M.A.IN CULTURAL SRUDIES பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். சத்தியானந்தம் ஏற்கனவே கலைமாமணி பட்டத்தை (B.A) யாழ்.பல்கலைக்கழகத்திலும் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பட்டத்தை (PGDE) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திலும் இதழியல் துறை டிப்ளோமா பட்டத்தை கொழும்பு பல்கலைக்கழகத்திலும் DIP.IN.JOURNALISM விசேட பயிற்றப்பட்ட வர்த்தகம் சான்றிதழ் கற்கை நெறியை மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையிலும் SP.TRD.COMM. போன்ற கல்வி மற்றும் தொழிற்றுறைப் பட்டங்களைப் பெற்றுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வட. மாகாண அபிவிருத்திக்கு உள்ளூர், சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புகள் தேவை

**ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ்**





அரசசார்பற்ற மற்றும் சர்வதேச அமைப்புகளை ஒருங்கிணைப்பதற்கான தேவை காணப்படுவதாக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டத்தின் இலங்கைக்கான கூட்டுறவு அபிவிருத்தி பிரிவின் தலைமை அதிகாரி லின்டா எரிக், வடக்கு மாகாண ஆளுநருக்கிடையில் வடக்கு ஆளுநர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு உள்ளூர் மற்றும் சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புகளுடன் அரச சார்பற்ற அமைப்புக்களின் உதவிகளும் தேவைப்படுவதாக வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்தார். சர்வதேச அமைப்புகளை ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகள் பின்னடைந்துள்ளதால் அதனை மீள ஒருங்கிணைப்பதற்கு ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டம் உதவி புரிய வேண்டுமெனவும் ஆளுநர் தெரிவித்தார். அத்துடன் மாகாணத்தில் சுத்தமான குடிநீரை பெற்றுக்கொள்வதில் பாரிய சிக்கல் காணப்படுவதுடன், அனைத்து அரச திணைக்களங்களையும் டிஜிட்டல் மயப்படுத்த வேண்டிய தேவை உள்ளதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

இதேவேளை வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் ஆளுநர் எடுத்துக்கூறினார்.

விடயங்களை கேட்டறிந்துக் கொண்ட ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டத்தின் இலங்கைக்கான கூட்டுறவு அபிவிருத்தி பிரிவின் தலைமை அதிகாரி லின்டா எரிக், அர சார்பற்ற மற்றும் சர்வதேச அமைப்புகளை ஒருங்கிணைக்கும் செயற்பாடுகளை மேலும் வலுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக அவர் தெரிவித்தார்.

## வடக்கின் உதயம்

# உழவு இயந்திரம் தடம் புரண்டதில் பாடசாலை மாணவர்கள் மூவர் படுகாயம்!

**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**

முள்ளியவளைப்பகுதியிலுள்ள பாடசாலை மாணவர்கள் மூவர் உழவியந்திரம் தடம் புரண்டதில் படுகாயமடைந்துள்ளனர்.

இல்ல விளையாட்டுப் போட்டி தயார்படுத்தலில் ஈடுபட்டிருந்த மாணவர்கள் உழவியந்திரத்தில் சென்ற போதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

முள்ளியவளை பிரதேச பாடசாலையொன்றின் இல்ல விளையாட்டுப் போட்டி நாளை நடைபெறவிருந்தமையால் அதற்கான பொருட்களை ஏற்றுவதற்காக பத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் உழவியந்திரத்தில் சென்றுள்ளனர். இதன்போதே உழவு இயந்திர பெட்டி தடம் புரண்டுள்ளது.

அதில் பயணித்த மாணவர்கள் மூவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்றுவருகின்றனர்.

இவ்விபத்து தொடர்பில் முள்ளியவளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் சாரதியை விசாரணைக்குட்படுத்தி வருகின்றனர்.

## வெடுக்குநாறி மலை விவகாரம்:

# கைதுசெய்யப்பட்ட 8 பேரையும் விடுவிக்க கோரி ஆர்ப்பாட்ட பேரணி

**வவுனியா விசேட நிருபர்**



வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலயத்தில் கைது செய்யப்பட்ட பூசகர் உள்ளிட்ட 8 பேரையும் விடுவிக்க கோரியும், பொலிஸாரின் அராஜகத்தை கண்டித்தும் வவுனியா, நெடுங்கேணியில் ஆர்ப்பாட்டம் பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது.

நெடுங்கேணி நகர சந்தியில் ஆரம்பித்த கண்டன ஆர்ப்பாட்ட பேரணி, நெடுங்கேணி புளியங்குளம் வீதி ஊடாக சென்று வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் வாயிலில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றதுடன், உதவிப் பிரதேச செயலாளரிடம் கண்டன மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து அங்கிருந்து பேரணியாக சென்ற ஆர்ப்பாட்டக் காரர்கள் வனவளத் திணைக்கள அலுவலக வாயிலில் நின்று வனவளத் திணைக்களத்திற்கு எதிராக கோஷங்களை எழுப்பியதுடன், பின்னர் அங்கிருந்து சென்று நெடுங்கேணி பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டனர்.

இதன்போது பொலிஸ் உயர் அதிகாரிகள் வருகை தந்து ஆர்ப்பாட்டக் காரருடன் பேச முற்பட்ட போதும், அதற்கு மறுப்பு தெரிவித்து பொலிஸாருக்கு எதிரான கோஷங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் எழுப்பினர்.

இதன்போது அப்பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டதுடன், பொலிஸ் நிலையத்தில் விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

பொலிஸ் நிலையம் முன்பாக சுமார் அரை மணிநேரம் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்ட மக்கள் பின்னர் அங்கிருந்து சென்று பஸ் நிலையத்தில் கண்டன ஆர்பாட்டத்தை நிறைவு செய்தனர்.

# பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

**சாவகச்சேரி விசேட நிருபர்**

யா/கொடிக்காமம் அரசினர் வித்தியாலய பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் அண்மையில் பாடசாலை அதுபர் திரு.ப.தர்மபூவதி தலைமையில் பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது.

இதன்போது புதிய நிர்வாக சபையின் தலைவராக பாடசாலை முதல்வர் திரு.ப.தர்மபூவதியும், செயலாளராக கலாநிதி வைத்திலிங்கம் ஜெகதாஸும், பொருளாளராக ஆசிரியர் திருமதி சிவலோகநாதன் சாந்தினியும், உப செயலாளராக திருமதி செல்வம் அனுசுயாவும் , நிர்வாக உறுப்பினர்களாக ச.நிஷாந்தினி, அ.சிந்துஷா, ஆ.சுகன்யா, இ.அனுரதன், ஜெ. ஜீவாந்தினி, தே. சங்கீதா, ம.வசந்தன், கு. டயானா, சி. நிரஞ்சனா மற்றும் ஆசிரியர் வி. சுகந்தினி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# கிராம மக்களுடைய கல்வி, உரிமை சார்ந்த விடயங்களை மேம்படுத்துவதே எமது பிரதான நோக்கம்

**சாவகச்சேரி விசேட நிருபர்**



கிராம மக்களுடைய கல்வி மற்றும் உரிமை சார்ந்த விடயங்களை மேம்படுத்துவதே எமது பிரதான நோக்கம் என சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் பணிப்பாளரும் சட்டத்தரணியுமான அம்பிகா சிறிதரன் தெரிவித்தார்.

சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் காரைநகர் ஊரி கிராமத்தில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தின நிகழ்வில் தலைமையுரை ஆற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

வாழ்வாதாரங்களை வழங்குவது மாத்திரம் எமது நோக்கம் அல்ல.

கிராம மக்களின் கல்வி மற்றும் உரிமை சார்ந்த விடயங்களை மேம்படுத்துவது, உரிமை சார்ந்த விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவது மற்றும் உரிமைகளைப் பாதுகாப்பது போன்றவை எமது செயற்பாடுகளாக உள்ளன.

வாழ்வாதாரம் என்பது ஆரம்பப் புள்ளியாகவே காணப்படுகிறது.தென்மராட்சி, குருநகர், பாஷையூர் உள்ளிட்ட இடங்களில் இவ்வாறான வாழ்வாதார உதவிகளை வழங்கி பின்னர் அக்கிராம மக்களுடைய உரிமை சார்ந்த விடயங்களை பேணும் விடயத்தில் அக்கறை காட்டி வருகிறோம்.

சர்வதேச மகளிர் தினம் இம்முறை 'பெண்களில் முதலீடு செய்வோம் முன்னேற்றத்தை விரைவுபடுத்துவோம்' என்ற தொனியில் கொண்டாடப்படுகிறது.

முதலீடு என்பது வெறுமனே நிதி சார்ந்ததாக இல்லாமல் கல்வி, வாழ்க்கைத்தரம் உள்ளிட்ட விடயங்களிலும் பெண்களை வலுவூட்டுவதாக அமைய வேண்டும். நாடு முன்னேற வேண்டுமானால் பெண்கள் முன்னேற்றம் அடைய வேண்டும்.

காரைநகர், ஊரி கிராமபெண்கள் தமது உடல் வலிமையைப் பயன்படுத்தி கடற்றொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு உடல் வலிமையைப் பயன்படுத்தி உழைக்கும் பெண்கள் மிகக் குறைவு.

எனவே தான் இம்முறை மகளிர் தினத்தை ஊரி கிராமத்தில் முன்னெடுத்து உழைக்கும் பெண்களை கௌரவப்படுத்தியுள்ளோம் என அவர் தெரிவித்தார்.

# பேசாலை சென்.பத்திமா ம.ம.வித்தியாலய மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டி

**தலைமன்னார் விசேட நிருபர்**

மன்னார் பேசாலை சென்.பத்திமா மத்திய மகா வித்தியாலயத்தின் வருடாந்த மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டி பாடசாலை அதிபர் எஸ்.கே.பிகிராடோ தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கனகேஸ்வரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

விசேட அதிதியாக பேசாலை பங்குத் தந்தை அருட்பணி எஸ். அன்ரன் அடிகளாரும் கௌரவ விருந்தினர்களாக மன்னார் கல்வி பிரதிப் பணிப்பாளர் பி.ஞானராஜ், கல்வி திணைக்களம் சார்ந்த அதிகாரிகள் எஸ்.நவநீதன், திருமதி பயஸ்றதி பீரிஸ், முன்னாள் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எம்.ஏ.ஜே. துரம், பிரான்ஸ் வர்த்தகர் சீ.சம்சன் மற்றும் புனித வெற்றிநாயகி ஆலய பரிபாலன சபை செயலாளர் சீ.மெக்லஸ் பெர்னாண்டோ ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# பூநகரியில் கலைஞர் சங்கமம் நிகழ்வு!



**முல்லைத்தீவு குரூப் நிருபர்**

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் பிரதேச கலைஞர் ஒன்றுகூடலும் ஆற்றுகை நிகழ்வும் அண்மையில் பூநகரி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது கலைஞர்களின் பல்வேறு கலை படைப்புகள் ஆற்றுகை செய்யப்பட்டன. தொடர்ந்து, கலைஞர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் ஊர்காவற்றுறை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர், யாழ் மற்றும் கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர், மாவட்ட கலாசார உத்தியோகத்தர், இந்து சமய கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர், கிறிஸ்தவ அபிவிருத்தி உத்தியோகத்தர், கலாசார உத்தியோகத்தர்கள், பூநகரி மற்றும் தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை பிரதேச கலைஞர்கள், பண்பாட்டு பேரவையினர் கலந்து கொண்டிருந்தனர்.




## Uber Eats Sri Lanka சேவைக் கட்டணத்தை அறிமுகப்படுத்துகிறது

*Uber Eats Sri Lanka*, தனது பிரபலமான உணவு மற்றும் மளிகைப் பொருட்களை விநியோகிக்கும் செயலியின் மூலமாக மேற்கொள்ளப்படுகின்ற ஆர்டர்களுக்கு சேவைக் கட்டணத்தை அறிமுகப்படுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது. பெப்ரவரி 29 முதல், நம்பகமான மற்றும் திறன்மிக்க உணவு விநியோக சேவையை நிலைநிறுத்துவதை நோக்கமாகக் கொண்ட, கட்டணங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள மறுசீரமைப்பை வாடிக்கையாளர்கள் அவதானிக்க முடியும்.

Uber Eats செயலியின் மூலமாக ஆர்டர் செய்யும் போது, வாடிக்கையாளர்கள் விநியோகம் மற்றும் சேவைக் கட்டணம் ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய விநியோக கட்டணங்களைச் செலுத்துவார்கள். சேவைக் கட்டணத்தின் பாகமானது ஆர்டர் ஒன்றின் மதிப்பில் 5% க்கு சமமான தொகையாக இருக்கும் என்பதுடன், ரூபா 25 முதல் ரூபா 125 வரை அமைந்திருக்கும். மேலும் ஆர்டரை உறுதிப்படுத்தும் முன் வாடிக்கையாளர்கள் அதனை நிறைவு செய்து முடிவுறுத்தும் போது அவர்களுக்கு இந்த கட்டணம் புலப்படும். இந்த சேவைக் கட்டணத்தை அறிமுகப்படுத்துவது உணவு மற்றும் பலசரக்குப் பொருட்களுக்கான ஆர்டர்கள் இரண்டிற்கும் குறைந்த சராசரி தொகை கொண்ட விநியோக கட்டணத்திற்கு ஒத்ததாக இருக்கும். அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் சிறிய தொகை கொண்ட ஆர்டர் கட்டணம் இனி வசூலிக்கப்படாது.

இதன் விளைவாக, Uber One உறுப்பினர்கள் அல்லாதவர்கள், உணவு அல்லது மளிகைப் பொருட்களைத் தேர்ந்தெடுக்கும்போது குறைந்த சராசரி விநியோக கட்டணத்தை உள்ளடக்கிய அதே அளவிலான விநியோக கட்டணங்களைச் செலுத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மற்றும் அவர்கள் ஆர்டரை நிறைவுசெய்யும் தருணத்தின் போது கூடுதல் சேவைக் கட்டணத்தை அவர்களால் அவதானிக்க முடியும்.

Uber One உறுப்பினர்களுக்கு இதனால் எவ்விதமான பாதிப்பும் கிடையாது. உணவு மற்றும் மளிகை ஆர்டர்களின் போது முறையே ரூபா 900+ மற்றும் ரூபா 1200+ ஆர்டர்களுடன் Uber One முத்திரையிடப்பட்ட வணிகர்களிடம் இருந்து பிரத்தியேக சலுகைகள் மற்றும் தள்ளுபடிகளை தொடர்ந்து அனுபவிக்கிறார்கள். தகுதியான ஆர்டர்களுக்கு 0 விநியோக கட்டணத்திற்கு மேலதிகமாக, எவ்விதமான சேவைக் கட்டணமும் வசூலிக்கப்படாது.

## கிரேஷியன் – ஜோன் கீல்ஸ் அறக்கட்டளைகளின் மலையக இலக்கியம் பற்றிய ஒரு நாள் கருத்தரங்கு




கிரேஷியன் அறக்கட்டளை ஜோன் கீல்ஸ் அறக்கட்டளையுடன் இணைந்து "மலையகத் தமிழ் சமூகத்தினை எழுதுதல்: படைப்பாக்கமும் உரையாடல்களும்" என்ற கருப்பொருளிலே யாழ்ப்பாணத்திலே ஓர் ஒரு நாள் கருத்தரங்கினை ஏற்பாடு செய்தது. இலங்கையில் இடம் பெறும் இலக்கிய நிகழ்வுகளிலே மலையகத் தமிழ் மக்கள் தொடர்பான இலக்கியங்களுக்கு அதிகளவில் முக்கியத்துவம் கொடுக்காத ஒரு போக்கு அவதானிக்கப்படும் ஒரு சூழலிலே, யாழ்ப்பாணப் பொதுநூலகக் கேட்போர்கூடத்திலே கடந்த பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி அன்று இடம் பெற்ற இந்த நிகழ்ச்சி மலையக இலக்கியம் பற்றிப் பேசுவதற்கான ஒரு வெளியினை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இன்று மலையக மக்கள் எனப்படுவோரின் மூதாதையர்கள் பிரித்தானியக் காலனியாதிக்கக் காலத்திலே தென்னிந்தியாவில் இருந்து ஒப்பந்தத் தொழிலாளர்களாக இற்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முன்னர் சிலோனிற்குக் கொண்டுவரப்பட்டனர். அவர்கள் சிலோனினை வந்தடைந்தமையின் 200 ஆண்டுகளின் நிறைவினை நினைவுகூரும் செயற்பாடுகள் 2023 ஆம் ஆண்டிலே பரவலாக இடம்பெற்றன. அந்த நிகழ்வுகளின் தொடர்ச்சியாகவே இந்த ஒரு நாள் கருத்தரங்கும் யாழ்ப்பாணத்திலே இடம்பெற்றது.

மலையகத் தமிழ் மக்களின் வாழ்வியல், அனுபவங்கள், இலட்சியங்கள், போராட்டங்கள் என்பவற்றினைப் பற்றிப் பேசும் இலக்கிய மற்றும் திரைப்படம் சார் புத்தாக்கத்தின் மீது கவனத்தினைக் குவிக்கும் வகையில் இந்த நிகழ்ச்சி வடிவமைக்கப்பட்டது. மலையகத்தினைச் சேர்ந்த எழுத்தாளர்கள் இந்த நிகழ்விலே கலந்துகொண்டு தமது எழுத்துக்களில் இருந்து சில பகுதிகளை வாசித்தனர்.

நடனக் கலைஞரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே நடனத்துறையிலே போதனாசிரியராகவும் விளங்கும் இராசையா தனராஜின் மலையக மக்களின் அனுபவங்களையும், வாழ்க்கையினையும் வெளிக்கொண்டு வரும் வகையிலான நடன ஆற்றுகை நிகழ்விலே கலந்துகொண்டோரின் மனதை உருக்கிய ஒன்றாக இருந்தது.

## தொழில்முனைவோர் திறனை கட்டியெழுப்பும் EntreMindz Season 3 இற்கு அமானா அனுசரணை

அடுத்த தலைமுறை தொழில் முனைவோரை கட்டியெழுப்பும் வகையில், அறிவு, அனுபவங்கள் மற்றும் உள்ளார்ந்த அம்சங்கள் ஆகியவற்றை ஊக்குவிக்கும் வகையில், *UTO EduConsult* இனால் ஏற்பாடு செய்யப்படும் *EntreMindz* பருவம் 3க்கான அனுசரணையை வழங்க அமானா வங்கி மீண்டும் முன்வந்திருந்தது. இந்த அனுசரணையினூடாக, பொருளாதார வளர்ச்சியை தூண்டும் இளம் வயது முதல் தொழில்முனைவோரின் ஆற்றலை ஊக்குவிப்பது மற்றும் புத்தாக்கமான ஸ்தாபிப்புகளுக்கு ஆதரவளிப்பது போன்றவற்றுக்கான தனது அர்ப்பணிப்பை மீள உறுதி செய்திருந்தது.

*Gen Z* தலைமுறையினரின் தொழில்முனைவோர் மனநிலையை திறக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்ட *EntreMinds season 3* இல், 15 மற்றும் 20 வயதுக்குட்பட்ட 35 அணிகள் பங்கேற்று, தமது பிரத்தியேகமான வியாபாரத் கருத்திட்டங்களை நிபுணத்துவ நடுவர் குழுவினர் முன்னிலையில் முன்வைத்திருந்தனர். இதில் சன்ன குணவர்தன (பிரதம நிறைவேற்று அதிகாரி – தங்கொட்டுவ போர்சலேன்), அஜித் கதிர்காமர் (சந்தைப்படுத்தல் மற்றும் தொடர்பாடல் தலைமை அதிகாரி *Aqcellar*), சித்தீக் அக்பர் (உப தலைவர் நுகர்வோர்வங்கியியல்மற்றும்சந்தைப்படுத்தல் அமானா வங்கி), அப்துல் கரீம் (பிரதம நிறைவேற்று அதிகாரி *Inotrend International*), இஷ்ரத் ரவுப் (முகாமைத்துவ பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி *Adl Capital*) மற்றும் ஷரிகா முபாரக் (இணை ஸ்தாபகர் மற்றும் தலைவர் *Aqcellar South East Asia*) ஆகியோர் அடங்கியிருந்தனர்.

## தனது முதலாவது 'DigiZone'அனுபவத்தை அறிமுகம் செய்த கொமர்ஷல் வங்கி



கொமர்ஷல் வங்கி தனது வாடிக்கையாளர்களுக்கு புதிய அனுபவத்தை வழங்கும் வகையில் 'DigiZone' வலயத்தை வங்கியின் வெள்ளவத்தை கிளையில் திறந்து வைத்துள்ளது. வங்கியின் விரிவான பல டிஜிட்டல் சேவைகளை வாடிக்கையாளர்கள் விசாலமாகப் பயன்படுத்துவதை நோக்காகக் கொண்டு இந்த புதிய வலயம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இலக்கம் 343 காலி வீதி கொழும்பு 06ல் அமைந்துள்ள வங்கியின் வெள்ளவத்தை கிளையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள 'DigiZone' டிஜிட்டல் மயமான வங்கிச் சேவைகளோடு வாடிக்கையாளர்களை பரிச்சயப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. தேவை ஏற்படும் பட்சத்தில் வங்கியின் டிஜிட்டல் உதவியாளரின் சேவைகளையும் பெற்று புதிய அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் வகையில் இது அமைந்துள்ளது.

WiFi மூலம் தொடர்பு படுத்தப்பட்டுள்ள கம்பியூட்டர்கள் இங்கு பொருத்தப்பட்டுள்ளன. வாடிக்கையாளர்களின் நடமாடும் கருவிகளுக்கு இலவச WiFi சேவைகளும் இங்கு உண்டு. இதன் மூலம் இங்கு வருகை தருபவர்கள் தமது டிஜிட்டல் செயலிகளைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். டிஜிட்டல் வங்கி சேவைகளுக்காக வாடிக்கையாளர்கள் இங்கு தம்மை பதிவு செய்து கொள்ள முடியும். அதன் மூலம் தமது உரிய கணக்குகளுக்குள் பிரவேசித்து அல்லது புதிய கணக்குகளைத் திறந்து டிஜிட்டல் வங்கிச் செயற்பாடுகளில் ஈடுபட முடியும்.

## HUTCH – கல்வி அமைச்சுடன் கைகோர்த்து இலத்திரனியல் சைக்கிள்களை மாணவர்களுக்கு அன்பளிப்பு




சமூக மேம்பாடு மற்றும் நிலைபேணத்தகு வழியிலான போக்குவரத்து ஆகியவற்றை நோக்கிய ஒரு முக்கியமான படியாக, முன்னணி தொலைதொடர்பாடல் சேவை வழங்குனரான ஹட்ச் ஸ்ரீ லங்கா நிறுவனம், வர்த்தக சமூகப் பொறுப்புணர்வு மற்றும் நிலைபேண்தகமை மீதான தனது அர்ப்பணிப்பை மீண்டும் ஒரு முறை வெளிக்காட்டும் வகையில் புதுமையான முயற்சியொன்றை மேற்கொண்டுள்ளது. சிறுவர்கள் மற்றும் கல்வித்துறையில் நேர்மறையான விளைவை ஏற்படுத்தும் முயற்சிகளில் நிறுவனம் கவனம் செலுத்தியுள்ளமைக்கு அமைவாக, இலங்கையில் கிராமப்புற பாடசாலைகள் மற்றும் அவற்றின் பணியாளர்களுக்கு கல்வி அமைச்சின் கூட்டாண்மையுடன் இணைந்து மின்சாரத்தால் இயங்கும் 130 சைக்கிள்களை (ebike) நன்கொடையாக வழங்கும் ஒரு மகத்தான முயற்சியை மேற்கொண்டுள்ளது.

"நிலைபேணத்தகு போக்குவரத்தினூடாக கல்வியை மேம்படுத்தல்" என்ற பெயரிலான இந்த முயற்சி, தொலைதொடர்பாடல் சேவைகளை வழங்குவதற்கும் அப்பால், பரந்த அளவில் சமூக மேம்பாட்டை கணிசமாக வளர்ப்பதில் ஹட்ச் நிறுவனத்தின் அபிலாஷைகளை பிரதிபலிக்கின்றது. இலங்கையில் கல்வியை மேம்படுத்தி, தரம் உயர்த்துதல் மற்றும் இது தொடர்பில் அரசாங்கத்தின் நோக்கத்திற்கு உதவுவதல் ஆகியவற்றில் ஹட்ச் நிறுவனத்தின் அர்ப்பணிப்பையும் இது அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது.

கௌரவ கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்த ஒரு விசேட வைபவத்தில் மின்சாரத்தில் இயங்கும் இந்த சைக்கிள்கள் உத்தியோகபூர்வமாக கையளித்து வைக்கப்பட்டன. இலங்கை தொலைதொடர்பாடல்கள் ஒழுக்காற்று ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி தர்மசிறி குமாரதுங்க மற்றும் பணிப்பாளர் நாயகம் மதுஷங்க திசாநாயக்க ஆகியோரும் மதிப்பிற்குரிய விருந்தினர்களில் இடம்பெற்றிருந்தனர். ஹட்ச் நிறுவனத்தின் சார்பில், இந்த நிகழ்வுக்காக நாட்டிற்கு விசேடமாக வருகை தந்த *Hutchison Asia Telecommunications (HAT)* இன் பணிப்பாளர் திருமதி ஆன் சென் மற்றும் *Hutchison Telecommunications Lanka (HUTCH Sri Lanka)* இன் பிரதம நிறைவேற்று அதிகாரி சௌமித்ரா குப்தா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

## 12ஆவது ஆண்டாக Kedalla Construction Expo 2024 உடன் இணையும் செலான் வங்கி




செலான் வங்கி, *Kedalla Construction Expo 2024* உடன் தொடர்ந்து 12ஆவது ஆண்டாக *Title Partner*ஆக தனது இணைவை அறிவித்தது.

இலங்கையின் முதன்மையான கட்டுமான மற்றும் வீட்டு அலங்கார கண்காட்சியாக அங்கீகரிக்கப்பட்ட இந்தக் கண்காட்சி, *Asia Exhibitions & Conventions (Pvt) Ltd*ஆல் ஏற்பாடு செய்யப்பட்டு மார்ச் 22 முதல் மார்ச் 24 வரை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) நடைபெற உள்ளது.

செலான் வங்கி, அதன் பரந்த வங்கித் தயாரிப்புகள் மற்றும் சேவைகளுடன் நிகழ்வில் ஒரு முக்கிய இடத்தை வகிக்கும் என்பதில் ஐயம் இல்லை. வீடமைப்பு மற்றும் தனிநபர் கடன்கள், குத்தகை வசதிகள், கடன் அட்டைகள், நடப்பு மற்றும் சேமிப்புக் கணக்குகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பல சேவைகள் தொடர்பாக பார்வையாளர்கள் அறிந்து கொள்ளலாம்.

வீட்டு உரிமையாளர்களை வலுவூட்டுவதற்காக செலான் வங்கியின் வீடமைப்புக் கடன் நிபுணர்கள் குழு கண்காட்சியில் கலந்துகொள்வர்.

இந்நிபுணர்கள் வீடமைப்பு கடன்கள் குறித்த நிபுணத்துவ ஆலோசனைகளையும் வழிகாட்டுதலையும் வழங்குவதுடன் பங்கேற்பாளர்கள் நன்மை பயக்கும் வட்டி விகிதங்களுடன் அவர்களுக்குத் தேவையான நிதியுதவியைப் பெறுவதையும் உறுதி செய்வர்.

மேலும் வாடிக்கையாளர்கள், கடன் விண்ணப்ப செயல்முறை முழுவதும் அர்ப்பணிப்புள்ள வல்லுநர்களிடமிருந்து தனிப்பயனாக்கப்பட்ட உதவியை எதிர்பார்க்கலாம்.

## SampathCards உடன் இணைந்து 0% வட்டி உடன் காப்புறுதியை எளிதாக்கும் HNB



இலங்கையில் காப்புறுதி தீர்வுகளை வழங்கும் முன்னணி நிறுவனமான HNB General Insurance, வாடிக்கையாளர்களுக்கு வாகன மற்றும் வாகனம் அல்லாத காப்புறுதிகள் ஆகிய இரண்டிலும் 12 மாத, 0% வட்டி திட்டங்களை வழங்குவதற்காக சம்பத் வங்கியுடன் கூட்டுப் பங்காளித்துவத்தை அறிவித்துள்ளது. HNB General Insurance குழுவில் அங்கம் வகிக்காத வங்கியுடனான ஒத்துழைப்பைக் குறிப்பதோடு, இலங்கை முழுவதிலும் உள்ள பரந்த வாடிக்கையாளர்களுக்கு காப்புறுதியை அணுகக்கூடியதாக மாற்றி, அதன் எல்லையை பாரிய அளவில் விரிவுபடுத்துவதை இது காட்டுகிறது. இந்த கூட்டாண்மை மூலம், சம்பத் வங்கி கடனட்டை வைத்திருப்பவர்கள் தற்போது தங்கள் காப்புறுதிக் கட்டணத்தை தங்களுக்கு ஏற்ற தவணைகளில் செலுத்துவதற்கான வசதியை பெற முடியும். முன்கூட்டிய வட்டிக் கட்டணங்கள் ஏதுமின்றி, வாடிக்கையாளர்கள் தங்கள் வாகன, வீட்டு, பயண, மருத்துவ அல்லது வாகனம் அல்லாத வேறு ஏதேனும் காப்புறுதி திட்ட கட்டணத்தை ஒரு வருட காலம் வரை செலுத்தலாம். இது நிதிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தி, அத்தியாவசிய காப்புறுதியை மேலும் அணுகக்கூடியதாக மாற்றுகிறது. HNB General Insurance பிரதம வணிக அதிகாரியும் பொது முகாமையாளருமான சம்பத் விக்ரமாராச்சி இது பற்றி தெரிவிக்கையில், "எமது வாடிக்கையாளர்களுக்கு இந்த தனித்துவமான நன்மையை வழங்குவதற்காக, இலங்கையில் மிகப் பெரிய வங்கி அட்டை தளத்தையும் விரிவான வலையமைப்பையும் கொண்ட முன்னணி வங்கியான சம்பத் வங்கியுடன் கைகோர்ப்பதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். இந்த ஒத்துழைப்பானது, காப்புறுதியை மிகவும் உள்ளீர்க்கப்பட்டதாகவும், அனைவருக்கும் கட்டுப்படியானதாகவும் மாற்றுவதற்கான எமது உறுதிப்பாட்டை கோடிட்டுக் காட்டுகிறது. முன்கூட்டிய வட்டிச் செலவுகளை நீக்குவதன் மூலம், பெருமளவிலான மக்கள் தமது காப்புறுதியையும், மன அமைதியையும் பெற இதன் மூலம் முடியும் என நாம் நம்புகிறோம்." என்றார்.

## சர்வதேச மகளிர் தினத்தை கொண்டாடிய மக்கள் வங்கி



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மக்கள் வங்கியினால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட கொண்டாட்டம் கொழும்பு 02, மக்கள் வங்கியின் தலைமையகக் கிளையில் அதன் பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் கிளைவ் பொன்சேகா தலைமையில் அண்மையில் இடம் பெற்றது.மக்கள் வங்கி இந்த ஆண்டு மகளிர் தினத்தை "உலகத்தை வென்ற பெருமை இவள்" என்ற தொனிப்பொருளில் கொண்டாடியது. பெண்களின் தொழில் முயற்சியை ஊக்குவிக்கும் வகையில், இலங்கையில் உள்ள சிறு தொழில்களை உயர் தரத்திற்கு கொண்டு செல்வதற்கு ஆதரவளிக்கும் நிறுவனமான Good Market நிறுவனத்துடன் இணைந்து 12 பெண் தொழில்முயற்சியாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் அவர்கள் அறிமுகப்படுத்தப்பட்டு, வாய்ப்புக்களைத் தோற்றுவிப்பதற்கு இடமளிக்கப்பட்டது. மேலும் இங்கு கைத்தொழில் அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர, மகப்பேற்றியல் மற்றும் பெண்ணியல் வைத்திய நிபுணர் வைத்தியர் சகுந்தலா செனவிரத்ன, சிரேஷ்ட அழகுக்கலை நிபுணர் நயனா கருணாரத்ன, Good Market இன் இணை ஸ்தாபகர் அச்சலா சமரதிவாகர, மஹாராஜா நிர்வாக முகாமைத்துவ நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி, மகாராஜா இன்ஸ்டிடியூட் ஒஃப் மனேஜ்மென்ட் பிரதம நிறைவேற்று அதிகாரி, மகாராஜா டலன்ட் மனேஜ்மென்ட் பணிப்பாளர், சிரேஷ்ட ஊடகவியலாளர் சேதனா லியனகே ஆகியோருக்கு, இந்நாட்டின் அபிவிருத்திக்காக அவர்களுக்காக ஆற்றிய பணியைப் பாராட்டி விசேட விருதுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

## புற்றுநோய் சிகிச்சையில் புத்தாக்கமான மாற்றம்



இலங்கையில் முன்னணியில் உள்ள பல்வகைத் துறை கூட்டு நிறுவனமான DIMO நிறுவனத்தின் சுகாதாரப் பிரிவான DIMO Healthcare ஆனது, Siemens Healthineers இன் Varian நிறுவனத்துடன் கூட்டுச் சேர்ந்து, இலங்கையில் புற்றுநோய் தொடர்பான கதிர் வீச்சு (Radiation Oncology) நடவடிக்கை மருத்துவ நிபுணர்களுக்காக அதிநவீன சிகிச்சை தீர்வுகளை அறிமுகப்படுத்துகின்றன.

புற்றுநோயியல் (Oncology) துறையில் உலகளாவிய ரீதியில் முன்னணியில் உள்ள Varian நிறுவனம், தனது நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி, புத்தாக்கமான புற்றுநோய் சிகிச்சைத் தீர்வுகளை வழங்குகிறது. மஹரகம அபேக்ஷா, ஆசிரி சேர்ஜிகல் (கொழும்பு 05), செலிங்கோ புற்றுநோய் மையம் (கொழும்பு 02) ஆகிய வைத்தியசாலைகளில் பயன்படுத்தப்படும் Varian இன் தொழில்நுட்பங்கள், ஏற்கனவே இலங்கையில் கணிசமான வகையில் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. இந்த கூட்டாண்மையானது, நாடு முழுவதும் மேம்பட்ட புற்றுநோய் சிகிச்சைக்கான அணுகலை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## 'அவள் செழித்து வளர்கிறாள்' Suwa Diviya ஏற்பாட்டில் இணைய சுகாதார மன்றம்




சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பெண்களின் ஆரோக்கியம் மற்றும் அதிகாரமளித்தலைக் கொண்டாடும் நிகழ்நிலை சுகாதார மன்றமான "அவள் செழித்து வளர்கிறாள்" (She Thrives) என்ற இணையதளத்தை Suwa Diviya ஆனது அறிமுகப்படுத்துகின்றது. மார்ச் 9, 2024 அன்று காலை 9.30 மணி முதல் காலை 11 மணி வரை நடைபெற்ற இம்மெய்நிகர் நிகழ்வானது, இலங்கை வாழ் பெண்களுக்கு அவர்களின் நல்வாழ்வைக் கவனித்துக்கொள்ளும் வகையினில் ஓர் மாற்றத்தினை ஏற்படுத்தியது. Suwa Diviya என்பது நீரிழிவு நோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கம் கொண்ட ஒரு இலாப நோக்கற்ற அமைப்பாகும். இது நீரிழிவு நோயினைத் தடுப்பது மற்றும் முகாமைத்துவம் செய்வதில் இது கவனம் செலுத்தியது.

"She Thrives" என்பது சாதாரண சுகாதார மன்றம் அல்ல; இது ஒரு முன்னேற்றுவிக்கும் தளமாகும், இது பெண்களை அவர்களின் தனித்துவமான சுகாதார விடையங்கள் தொடர்பாக ஊக்குவிக்கவும், அதிகாரம் அளிக்கவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. நீரிழிவு நோய் போன்ற பரவலான பிரச்சினைகளை கையாள்வதிலிருந்து ஆரோக்கியத்திற்கான முழுமையான அணுகுமுறைகளை ஆராய்வது வரை, இந்த மன்றம் பங்கேற்பாளர்கள் வளரத் தேவையான அறிவு மற்றும் உத்திகளினை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# டி20 உலகக் கிண்ணத்தில் புதிய விதிமுறை அறிமுகம்




சர்வதேச கிரிக்கெட் கௌன்சில் சோதனை முறையில் ஆரம்பித்திருந்த ஸ்டொப் கிளொக் விதிமுறையை டி20 உலகக் கிண்ணத் தொடரிலிருந்து செயற்படுத்தவுள்ளது.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் இந்த விதிமுறை அறிமுகப்படுத்தப்பட்டு சோதனை நடவடிக்கையாக போட்டிகளின் போது அமுல்படுத்தப்பட்டிருந்தது. இந்தநிலையில் டுபாயில் நடைபெற்ற ஐ.சி.சி சந்திப்பின்போது இந்த விதிமுறை நிரந்தரமாக அமுல்படுத்தப்படும் என தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி ஒருநாள் மற்றும் டி20 போட்டிகளில் இந்த விதிமுறை நடைமுறைப்படுத்தப்படும் என்பதுடன், இந்த ஆண்டு மே.தீவுகள் மற்றும் அமெரிக்காவில் நடைபெறவுள்ள டி20 உலகக் கிண்ணத்திலும் இந்த விதிமுறை நடைமுறையாகவுள்ளது.

இந்த விதிமுறையில் ஒரு ஓவர் நிறைவின்போது ஸ்டொப் கிளொக் ஆரம்பிக்கப்பட்டு அடுத்த ஓவர் ஆரம்பிக்கும் போது ஸ்டொப் கிளொக்; நிறுத்தப்படும். பந்து வீசும் அணியானது ஓவர்களுக்கு இடையில் 60 விநாடிகளை மாத்திரமே எடுத்துக்கொள்ள முடியும்.

குறித்த இந்த நேரத்திற்குள் பந்து வீச தவறும் பட்சத்தில் ஆடுகளத்தில் உள்ள நடுவர் இரண்டு தடவைகள் பந்துவீசும் அணியை எச்சரிக்க முடியும். மூன்றாவது தடவையாக இந்த தவறு இடம்பெறும் பட்சத்தில் துடுப்பாட்ட அணிக்கு 5 ஓட்டங்கள் மேலதிகமாக வழங்கப்படும்.

ஸ்டொப் கிளொக் விதியை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு கள நடுவர்கள் மற்றும் மூன்றாவது நடுவருக்கு வழங்கப்படும் என்பதுடன், இறுதி தீர்மானத்தை நடுவர்களால் எடுக்க முடியும்.

அதேநேரம் போட்டியின் போது மேன்முறையீடு செய்யும் நேரம், துடுப்பாட்ட வீரரால் நேரம் தாமதமாக்கப்படுவது மற்றும் வேறு காரணங்களால் தாமதம் ஏற்படுமாயினும் அதற்கான முடிவினை எடுக்கும் பொறுப்பும் நடுவர்களுக்கு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தோமியன் ஹொக்கி தினம் இன்று

மாத்தளை புனித தோமஸ் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் கொழும்பு கிளையினால் (MOTA Colombo) ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'தோமியன் ஹொக்கி தினம்' இன்று (16) சனிக்கிழமை கல்லூரி வளாகத்தில் நடைபெறவுள்ளது.

2023 ஆம் ஆண்டில் கல்லூரியின் ஹொக்கி அணிகள் பெற்ற வெற்றிகளை கொண்டாடும் வகையில் இந்த ஹொக்கி தினம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் முதல் கட்டம் காலை 8.30 தொடக்கம் 11 மணி வரையும் திறந்தவெளி கூட்டம் ஒன்றாகவும் இரண்டாம் கட்டம் காலை 11.30 தொடக்கம் பிற்பகல் 1.30 வரை உள்ளரங்கு கூட்டம் ஒன்றாகவும் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக சங்கத்தின் முன்னாள் தலைவரும் தற்போதைய ஆலோசகருமான லக்ஷ்மன் சில்வா பங்கேற்கவுள்ளார்.



மாத்தறை புனித தோமஸ் கல்லூரி கூடைப்பந்து அணி மற்றும் பழைய மாணவர் கூடைப்பந்து அணிக்கு இடையே நடைபெற்ற நட்புரீதியான போட்டியில் கல்லூரி கூடைப் பந்து அணி வெற்றியீட்டியது. கனிஷ்ட பழைய மாணவர் சங்கத்தினால் கல்லூரி கூடைப் பந்து திடலில் மின்னொளி கம்பங்களை திறக்கும் நிகழ்வுக்கு இணையாக இந்தப் போட்டி நடைபெற்றது. இதன்போது கல்லூரி கூடைப்பந்து அணியின் தலைவர் தெனெத் சன்துல, அதிபர் அரவிந்த வீரக்கொடியிடம் இருந்து வெற்றிக் கிண்ணத்தை பெறுவதை காணலாம்.

## யாழ். வேகப்பந்து வீச்சாளருக்கு சென்னை சுப்பர் கிங்ஸ் அழைப்பு




இம்முறை இந்திய பிரீமியர் லீக் தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் வேகப்பந்து வீச்சாளராக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 17 வயது வேகப்பந்து வீச்சாளர் குகதாஸ் மாதுலன் அழைக்கப்பட்டுள்ளார்.

இலங்கையின் முன்னாள் வேகப் பந்து விச்சாளர் லசித் மாலிங்க பாணியில் பந்துவீசும் மாதுலன் அண்மையில் நடைபெற்ற 117 ஆவது வடக்கின் சமர் போட்டியில் பந்துவீசிய வீடியோ சமூக ஊடகத்தில் பிரபலமடைந்தது. யாழ். மத்திய கல்லூரிக்கு எதிரான அந்தப் போட்டியில் அவர் யாழ். புனித ஜோன்ஸ் கல்லூரிக்காக ஆடியிருந்தார்.

அவரது வீடியோ பிரபலம் அடைந்ததை அடுத்து சென்னை சுப்பர் கிங்ஸ் அணித் தலைவர் மஹேந்திர சிங் தோனியின் அவதானத்தை பெற்றிருப்பதோடு, இதனை அடுத்து சென்னை அணியின் வலை பயிற்சியின்போது அந்த அணி வீரர்களுக்கு பந்துவீச அவர் அழைக்கப்பட்டுள்ளார்.

தற்போது சென்னையில் இருக்கும் மாதுலன் சென்னை சுப்பர் கிங்ஸ் பயிற்சி குழாத்தின் கண்காணிப்பில் செயற்பட்டு வருகிறார்.

## ரிட்ஸ்பரி அஞ்சலோட்ட விழாவில் ராஹுல, தர்மபால அணிகள் வெற்றி





ரிட்ஸ்பரிஓல்கொட் பாடசாலைகள் அஞ்சலோட்ட விளையாட்டு விழாவில் ஆடவர் பிரிவில் ராஹுல கல்லூரி சம்பியன் கிண்ணத்தை வென்றதோடு மகளிர் பிரிவில் பன்னிப்பிட்டிய தர்மபால கல்லூரி சம்பியனானது.

மாத்தறை கொட்டவில விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இந்த விளையாட்டு விழாவில் நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்த முன்னணி பாடசாலை மாணவர்களின் மெய்வல்லுநர் திறமைகள் வெளிக்கொண்டுவரப்பட்டன.

இந்த நிகழ்வை ராஹுல கல்லூரி, ராஹுல கல்லூரியின் விளையாட்டு கழகம், பழைய மாணவர் சங்கம் மற்றும் விளையாட்டு மையம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன. இந்த நிகழ்வுக்கு சிபிஎல் வர்த்தக நாமத்தின் சொக்லட் நாமமான ரிட்ஸ்பரி பிரதான அனுசரணை வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச செய்திகள்

# காசாவில் உதவிக்காக காத்திருந்தவர்கள் மீதான இஸ்ரேலின் மற்றொரு தாக்குதலில் 25 பேர் பலி

## போர் நிறுத்தத்திற்கு புதிய முன்மொழிவை சமர்ப்பித்தது ஹமாஸ்



காசா நகரில் உதவிக்காக காத்திருந்த ஆயிரக்கணக்கானவர்கள் மீது இஸ்ரேலிய துருப்புகள் மீண்டும் ஒருமுறை நடத்திய துப்பாக்கிச் சூட்டில் மேலும் 25 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். காசாவில் போர் தொடரும் நிலையில் ஹமாஸ் அமைப்பு போர் நிறுத்தம் ஒன்றுக்கான புதிய முன்மொழிவை மத்தியஸ்தர்களிடம் சமர்ப்பித்துள்ளது.

காசா நகரில் குவைட் சுற்றுவட்டப்பாதையில் உதவிப் பொருட்களுக்காக நூற்றுக்கணக்கான மக்கள் காத்திருந்த வேளையிலேயே கடந்த வியாழக்கிழமை (14) மாலை இஸ்ரேலிய துருப்புகள் அவர்களின் மீது நேரடியாக துப்பாக்கிச் சூடு நடத்தி இருப்பதாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதில் 150க்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர்.

இதே பகுதியில் சில மணி நேரங்களுக்கு முன்னரும் உதவிக்காக காத்திருந்தவர்கள் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் அறுவர் கொல்லப்பட்ட நிலையிலேயே புதிய தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இதனை 'முன் திட்டமிடப்பட்ட படுகொலை' என்று காசா சுகாதார அமைச்சு வர்ணித்துள்ளது.

காசாவில் உதவிகள் செல்வதை முடக்கி இருக்கும் இஸ்ரேல், அங்கு உணவுக்காக காத்திருக்கும் பாதிக்கப்பட்ட மக்கள் மீதான தாக்குதல்களின் தொடர்ச்சியாகவே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இவ்வாறான தாக்குதல்களில் கொல்லப்பட்ட பொதுமக்களின் எண்ணிக்கை 400ஐ தாண்டியுள்ளது.

உணவு லொறியின் வருகைக்காக காத்திருந்த மக்கள் மீது இஸ்ரேலிய படைகள் ஹெலிகொப்டர்கள், டாங்கிகள் மற்றும் ஆளில்லா விமானங்களை பயன்படுத்தி தாக்குதல் நடத்தியதாக சம்பவத்தை பார்த்தவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கூட்டத்தின் மீது நேரடியாக சூடு நடத்தியதாக கூறுவதை இஸ்ரேலிய இராணுவம் மறுத்துள்ளது.

'மனிதாபிமான உதவிகள் விநியோகிக்கும் இடம் ஒன்றில் வியாழக்கிழமை மாலை பல டஜன் காசா மக்கள் இலக்கு வைக்கப்பட்டதாக கூறப்படும் செய்தி சரியானதல்ல' என்று அரபு ஊடகத்திற்கான இஸ்ரேலிய இராணுவ பேச்சாளர் அவிசாய் அட்ராயி, எக்ஸ் சமூகதளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் சம்பவம் தொடர்பில் ஆராய்ந்து வருவதாக அவிசாய் கூறியுள்ளார்.

காசா நகரில் குவைட் சுற்றுவட்டப்பாதையில் மக்கள் துப்பாக்கிச் சூட்டு காயங்களுக்கு இலக்காகி இருப்பாக வடக்கு காசாவில் உள்ள மருத்துவமனை ஒன்றின் பணிப்பாளரான முஹமது குராப் குறிப்பிட்டுள்ளார்.

உணவு லொறி ஒன்றுக்காக காத்திருந்த மக்கள் மீது 'ஆக்கிரமிப்பு படை நேரடியாக சூடு நடத்தியுள்ளது' என்று அவர் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திடம் குறிப்பிட்டுள்ளார்.

பலரும் சுடப்பட்ட நிலையில் இருப்பதை கண்டதாக அங்கிருக்கும் ஏ.எப்.பி. செய்தியாளரும் விபரித்துள்ளார்.

காசா போர் தற்போது ஆறு மாதங்களை தொட்டிருப்பதோடு அங்குள்ள மக்கள் தொகையில் கால் பங்கினராக குறைந்தது 576,000 பேர் பஞ்சத்தின் விளிம்பை தொட்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு குறிப்பிடுள்ளது. காசாவுக்கு மேலும் உதவிகளை அனுமதிக்குமாறு இஸ்ரேலுக்கு சர்வதேச அளவில் அழுத்தங்கள் அதிகரித்துள்ளன.

காசா எல்லைக் கடவைகளை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் இஸ்ரேல், போர் வெடித்தது தொடக்கம் ஒரே ஒரு வாயிலை மாத்திரம் திறந்து வைத்துள்ளது. அங்கு கடுமையான சோதனைகள் மற்றும் கெடுபிடிகளுக்கு பின்னரே உதவி வாகனங்கள் காசாவுக்குள் நுழைய முடியுமாக இருப்பதாக ஐ.நா நிறுவனங்கள் குறிப்பிட்டுள்ளன.

இந்நிலையில் கடல் வழியாக உதவிகளை விநியோகிப்பதற்கு சைப்ரஸில் இருந்து முதலாவது உதவிக் கப்பல் ஒன்று காசாவை நோக்கி பயணித்திருப்பதோடு காசாவில் தற்காலிக துறைமுகம் ஒன்றை அமைக்க அமெரிக்கா நடவடிக்கை எடுத்து வருகிறது. மறுபுறம் அமெரிக்கா உட்பட பல நாடுகளும் வானில் இருந்து காசாவுக்கு உணவு உதவிகளை போட்டு வருகின்றன.

எவ்வாறாயினும் தரை வழியான உதவி விநியோகமே செயல்திறன் மிக்கதாகவும் பொருத்தமானதாகவும் இருப்பதாக தொண்டு அமைப்புகள் கூறுகின்றன.

கடந்த மாதம் தென்மேற்கு காசா நகரில் ரஷீட் வீதியில் உணவு உதவிக்காக கூடிய பொதுமக்கள் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 118 பேர் கொல்லப்பட்ட சம்பவம் சர்வதேச அளவில் கடும் கண்டனத்திற்கு உள்ளானது.

இதேவேளை 200 தொன் உணவு உதவியுடன் காசா பயணித்திருக்கும் உதவிக் கப்பல் தற்போது காசா கடற்கரை தெரியும் தூரத்தை எட்டி இருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது. ஸ்பெயின் தொண்டு நிறுவனமான ஓபன் ஆர்ம் அமைப்பின் இந்தக் கப்பல் அரிசி, மாவு, பருப்பு வகைகள், பொதியிடப்பட்ட உணவுகளை நிரப்பியவாறே காசா பயணித்துள்ளது.

காசாவில் துறைமுகக் கட்டமைப்பு ஒன்று இல்லாத சூழலில் அங்கு இறங்கு துறை ஒன்றை அமைப்பதற்கும் இந்த கப்பல் பயணித்துக்கான ஏற்பாடுகளை செய்த அமெரிக்க தொண்டு நிறுவனமான 'வேர்லட்; சென்ட்ரல் கிச்சன்' அமைப்பு நடவடிக்கை எடுத்துள்ளது.

காசாவில் இடைவிடாது இஸ்ரேல் நடத்தும் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 31,500ஐ நெருங்கி இருப்பதோடு மேலும் 71 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர்.

**புதிய முன்மொழிவு**

இந்நிலையில் ஆயுள் தண்டனைக்கு முகம்கொடுத்திருக்கும் 100 பலஸ்தீன கைதிகளுக்கு பகரமாக இஸ்ரேலிய பணயக்கைதிகளை விடுவிப்பது உட்பட போர் நிறுத்த முன்மொழிவு ஒன்றை ஹமாஸ் அமைப்பு மத்தியஸ்தர்கள் மற்றும் அமெரிக்காவிடம் வழங்கியுள்ளது.

இஸ்ரேலிய சிறையில் இருக்கும் 700–1000 பலஸ்தீனர்களை விடுவிப்பதற்கு பகரமாக ஆரம்பத்தில் பெண்கள், சிறுவர்கள், வயதானவர்கள் மற்றும் நோயுற்ற இஸ்ரேலிய பணயக்கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என்று ஹமாஸின் முன்மொழிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் ஹமாஸ் பிடியில் இருக்கும் இஸ்ரேலிய பெண் வீராங்கனைகளும் உள்ளடங்குகின்றனர்.

மத்தியஸ்தர்களுக்கு ஹமாஸ் முன்வைத்திருக்கும் புதிய போர் நிறுத்த முன்மொழிவு தொடர்ந்து 'யதார்த்தமற்ற கோரிக்கைகளை' அடிப்படையாகக் கொண்டிருப்பதாக இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பிலான விடயம் போர் அமைச்சரவைக்கு மற்றும் பாதுகாப்பு அமைச்சரவைக்கு நேற்று கையளிக்கப்பட்டதாக அவரது அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

காசாவில் மனிதாபிமான நெருக்கடி மோசமடைந்து வரும் சூழலில் போர் நிறுத்தம் ஒன்றுக்கான இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையிலான வேறுபாடுகளை கலையும் முயற்சியில் மத்தியஸ்தத்தில் எகிப்து மற்றும் கட்டார் ஈடுபட்டு வருகிறது.

காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கும், அந்தப் பகுதிக்கு உதவிகளை விரைவுபடுத்துவதற்கும், தெற்கு மற்றும் மத்திய காசாவில் இடம்பெயர்ந்திருக்கும் பலஸ்தீனர்களை வடக்கிற்கு செல்வதற்கு அனுமதிப்பதற்கும் எகிப்து முயற்சித்து வருகிறது என்று அந்நாட்டு ஜனாதிபதி அப்தல் பத்தா அல் சிசி நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

'காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவது தொடர்பில் நாம் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம், போர் நிறுத்தம் ஒன்றின் மூலம் பெரும் அளவான உதவிகளை வழங்க முடியும்' என்று எகிப்து பொலிஸ் கல்லூரியில் பேசிய சிசி கூறினார்.

எகிப்துடனான எல்லையில் அமைந்திருக்கும் ரபா பகுதி மீது இஸ்ரேல் திட்டமிட்டிருக்கும் போர் நடவடிக்கையின் ஆபத்துக் குறித்து சிசி மீண்டும் ஒருமுறை எச்சரிக்கை விடுத்தார்.

ராபவில் இருக்கும் நான்கு படைப் பிரிவுகளையும் அழிக்க அங்கு படை நடவடிக்கை ஒன்றை முன்னெடுப்பது குறித்து நெதன்யாகு கடந்த பெப்ரவரியில் குறிப்பிட்டிருந்தார்.

காசா மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமானவர்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் ரபா மீதான தாக்குதல் பாரிய உயிர்ச்சேதங்களை ஏற்படுத்தும் என்று சர்வதேச அளவில் கவலை வெளியிடப்பட்டு வருகிறது.

காசாவில் இஸ்ரேலிய தரைப்படை இன்னும் நுழையாத பகுதியாக ரபா இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. காசாவில் நிரந்தர போர் நிறுத்தம் ஒன்றை கொண்டுவந்து அங்குள்ள இஸ்ரேலிய துருப்புகள் வாபஸ் பெறப்பட்டு, தெற்கில் இடம்பெயர்ந்திருக்கும் மக்கள் வடக்கிற்கு செல்ல அனுமதிக்கும் வகையில் ஹமாஸ் முன்னதாக போர் நிறுத்தம் முன்மொழிவுகளை செய்தது. எனினும் நெதன்யாகு அதனை நிராகரித்ததன் காரணமாகவே கடந்த சில வாரங்களில் போர் நிறுத்தம் ஒன்றை எட்ட முடியாமல் போயிருப்பதாக ஹமாஸ் குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் 40 நாள் போர் நிறுத்தம் ஒன்றுக்கான பரிந்துரை கடந்த பெப்ரவரியில் பாரிஸ் பேச்சுவார்த்தையின்போது ஹமாஸ் அமைப்புக்கு அளிக்கப்பட்டது. எனினும் அதற்கு ஹமாஸ் முழுமையாக உடன்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது முன்வைக்கப்பட்டிருக்கும் முன்மொழிவிலும் கூட, கைதிகள் பரிமாற்றத்திற்குப் பின்னர் நிரந்தர போர் நிறுத்தம் ஒன்றுக்கான திகதிக்கு இணக்கம் எட்டப்பட வேண்டும் என ஹமாஸ் வலியுறுத்தியுள்ளது. அதேபோன்று காசாவில் இருந்து இஸ்ரேலிய துருப்புகள் வாபஸ் பெறும் காலக்கெடுவையும் அது கோரியுள்ளது.